Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MARCH 14, 2023

செவ்வாய்க்கிழமை மார்ச் 14, 2023 | ஒளி: 08 கதிர்: 228 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

## சா/த பரீட்சை தாமதிக்கும்



2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதில் ஏற்படும் தாமதம் காரணமாக, மே மாதத்தில் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த க.பொ.த சாதாரண தர பரீட்சையை நடத்துவதில் தாமதம் ஏற்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, திங்கட்கிழமை (13) தெரிவித்தார்.

அமெரிக்க தூதுவர் ஜூலி சங்குடன், மட்டக்குளி புனித ஜோன்ஸ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இலங்கை பாடசாலை உணவு வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சைக்கான விடைத்தாள்களை மதிப்பிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ள காரணத்தால் பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சிறுபான்மையினரின் துன்பங்களை புரிந்து

## இணையாதவரை நாடு விடிவு பெறாது



வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்கள், மலையக தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் துன்பங்களைப் புரிந்துகொண்டு, அவற்றையும் பொதுப் போராட்டத்தில் இணைத்துக்கொள்ள சிங்கள அரசியல் கட்சிகள், சிங்கள மாணவர் - இளைஞர் அமைப்புகள் தயாராகாதவரை, இந்நாடு விடிவு பெறாது என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மனோ எம்.பி மேலும் கூறியுள்ளதாவது: "பயங்கரவாத தடை சட்டம் என்பதே தமிழருக்கு எதிராக 1979இல் உருவாகிய சட்டமாகும். ஏறக்குறைய 44 வருடங்களாக நம்மை போட்டு பாடுபடுத்தும் சட்டம். இதை எதிர்கொண்டு, நம்மில் எத்தனையோ பேர் மாண்டு போனார்கள். இன்னும் எத்தனையோ பேர் சிறையில் வாழ்வை இழந்துகொண்டிருக்கிறார்கள்; இன்னும் இழந்தபடி இருக்கிறார்கள். எத்தனையோ குடும்பங்கள் அநாதரவாக வாடுகின்றன.

தொடர்ச்சி P2



பேச்சுக்கு வராவிட்டால்

# புதனன்று முடங்கும்?

**வேலை நிறுத்தத்தில் குதிப்பதாக தொழில் சங்கங்கள் எச்சரிக்கை**

பேச்சுவார்த்தைக்கு வர அரசாங்கம் மறுத்தால், நாளை புதன்கிழமை (15) வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

குறைந்தபட்சம் ஆறு மாத காலத்துக்கு எந்தவொரு வரியையும் அரசாங்கத்தால் மாற்றியமைக்க முடியாது என்று நிபுணத்துவ தொழிற்சங்கக் கூட்டமைப்பு, வெள்ளிக்கிழமை நிதியமைச்சின் செயலாளரைச் சந்தித்த போது அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

இ.மி.ச, சிபெட்கோ மறுசீரமைப்பு

## இலங்கையில் முதலிட சீன நிறுவனங்கள் ஆர்வம்



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சிபெட்கோ) மற்றும் இலங்கை மின்சார சபை (இ.மி.ச) ஆகியவற்றின் மறுசீரமைப்பு செயல்முறையை துரிதப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், சீனாவின் சினோபெக் மற்றும் சைனா மெர்ச்சன்ட்ஸ் குழுமம் ஆகியவை இலங்கையில் முதலீடு செய்ய கவனம் செலுத்தி வருவதாக அறியமுடிகிறது.

பெற்றோலியம், இரசாயனங்கள், வர்த்தகம், துறைமுகம், தொழிற்றுறை பூங்கா செயற்பாடுகளில் கவனம் செலுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

மின்சார சபை, பெற்றோலிய கூட்டுத்தாபனத்தை பல பகுதிகளாகப் பிரித்து,

தொடர்ச்சி P2

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்

## மஹிந்தானந்தவிடம் மன்னிப்பு கோரியது



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மஹிந்தானந்த அளுத்கமகேவிடம் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம், மன்னிப்பு கோரியுள்ளார்.

தனிப்பட்ட விஜயம் ஒன்றுக்காக வெள்ளிக்கிழமை (10) இரவு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நாட்டை விட்டு வெளியேற முயன்ற மஹிந்தானந்த எம்.பி,

தொடர்ச்சி P2

## இரு எம்.பிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும்

**நீதிமன்றங்களில் தலையிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார் கர்தினால்**



பாராளுமன்ற சிறப்புரிமைகளின் அடிப்படையில் நீதிமன்றங்களின் நடவடிக்கைகளில் தலையிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்த பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, நீதித்துறையின் சுதந்திரம் பேணப்படுவதை உறுதி செய்வதற்கு இரு எம்.பி.க்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறேன் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தேர்தலுக்கான பட்ஜெட் ஒதுக்கீடு போதுமா?

**ஆணைக்குழு பரிசீலிக்க வேண்டும் என்கிறார் பிரசன்ன**



வரவு செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட பணம் போதுமானதா என்பதை தேர்தல் ஆணைக்குழு பரிசீலிக்க வேண்டும் என்று தெரிவித்த நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த வேண்டும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கம்பஹா, உடுகம்பல பிரதேசத்தில் திங்கட்கிழமை (13) இடம்பெற்ற அரசியல் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது, "இந்த நேரத்தில் நாம் தேர்தலுக்குச் சென்றால், மக்கள் மிகவும் சிரமப்படுவார்கள். வாழ்க்கைச் சுமை அதிகரிக்கும். முதலில் நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட வேண்டும். அதுதான் கடந்த காலத்தில் இல்லாமல் இருந்தது. மக்கள் கொல்லப்பட்டனர், வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டது; மக்கள் துன்புறுத்தப்பட்டனர். பொலிஸ் அதிகாரிகள் கழுத்தைப் பிடித்து, வீதிக்கு இழுத்துச் சென்றனர்.

நாட்டில் சட்டம் ஒழுங்கு இல்லை.

தொடர்ச்சி P2

## 4 ஆண்டுகளுக்கான பரீட்சை மார்ச் 18இல் நடைபெறும்



2019ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரையான 4 வருட காலப்பகுதிக்கான பொது தகவல் தொழில்நுட்ப பரீட்சை, மார்ச் 18ஆம் திகதி நடைபெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

2019, 2020, 2021, 2023 ஆகிய ஆண்டுகளுக்கான பொது தகவல் தொழில்நுட்ப பரீட்சை, மார்ச் 18 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 12.10 மணி வரை நடைபெறும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

மொத்தம் 517,676 பரீட்சார்த்திகள் 3,269 பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர் என்று பரீட்சைகள் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிறிஸ்தவ சபை ஒன்றுக்குள்

## பைபிளுடன் நடமாடிய நபர் கைது

**கனகராசா சரவணன்**

மட்டக்களப்பு நகரத்தில் உள்ள கிறிஸ்தவ சபை ஒன்றுக்குள் பைபிளுடன் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய முஸ்லிம் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு உள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் தொடர்பில் சந்தேகமடைந்த பொதுமக்கள், அவரை மடக்கிபிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததை அடுத்தே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் இருந்து திரும்பிய, கிண்ணியாவைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவர், நோயை குணப்படுத்த சீயோன் தேவாலயத்துடன் தொடர்பு கொண்ட போது, விசேட வழிபாட்டில் கலந்துகொள்வதற்காக அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

சம்பவதினமான ஞாயிறு காலை ஏழு மணியளவில், கிண்ணியாவில் இருந்து மட்டக்களப்பு பஸ்தரிப்பு நிலையத்துக்கு அந்த நபர் வந்திறங்கியுள்ளார்.

தொடர்ச்சி P2

இலங்கை மனித உரிமைகள்

## ஆணைக்குழுவில் ஆஜராக அமைச்சர் டிரான் மறுப்பு



இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் திங்கட்கிழமை (13) ஆஜராகுமாறு பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், ஆணைக்குழுவில் ஆஜராக அமைச்சர் மறுப்பு தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களைக் கட்டுப்படுத்த பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள் குறித்து அறிவதற்கே ஆணைக்குழு அமைச்சருக்கு அறிவித்துள்ளது.

எனினும், உரிய முறைப்படி அழைப்பாணை பிறப்பிக்கப்படாமை காரணமாக, ஆணைக்குழுவில் ஆஜராகாமல் இருக்க அமைச்சர் தீர்மானித்துள்ளதாக அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

அமைச்சரை ஆணைக்குழுவின் முன்னிலையில் அழைப்பதற்கான தீர்மானம் அதன் தவிசாளரால் எடுக்கப்பட்டதாக தெரிவித்த அந்தப் பேச்சாளர்,

தொடர்ச்சி P2

## விசாரணைக்கு அழைக்கவில்லை

**ஆணைக்குழு விளக்கம்**

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸை விசாரணைக்காக அழைக்கவில்லை என்றும் சில விடயங்களை தெளிவுபடுத்தும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மாத்திரமே கோரப்பட்டுள்ளதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெளிவுபடுத்தியுள்ளது.

ஜனநாயக நாடான இலங்கையில் அனைத்து பிரஜைகளுக்கும் ஒன்றுகூடுதல் மற்றும் கருத்துகளை வெளியிடுவதற்கான சுதந்திரம் காணப்படுவதாக ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த உரிமை தொழிற்சங்கங்கள், தொழிற்சங்க அமைப்புகள், மாணவர்கள், தனிநபர்கள் உள்ளிட்ட நாட்டின் வெவ்வேறு தரப்பினருக்கும் பொருந்துமென அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக சட்டத்தை அமலப்படுத்தும் அதிகாரிகள் கண்ணீர்ப்புகை,

தொடர்ச்சி P2

## விமலுக்கு பிடியாணை



கறுவாத் தோட்டம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பில், நீதிமன்றில் முன்னிலையாகாத காரணத்தால் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் எம்.பியுமான விமல் வீரவன்சவை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், திங்கட்கிழமை (13) பிடியாணை பிறப்பித்தார்.

பௌத்தலோக மாவத்தையிலுள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தி மக்களுக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ்

## மலையகத்துக்கான தனி வீட்டுத் திட்டத்தை அமலப்படுத்தும் உடன்படிக்கை கைச்சாத்து



நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியால் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்த இந்திய வீடமைப்பு திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக மேலதிக நிதியை வழங்குவதற்கு இந்தியா அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இணையாதவரை நாடு விடிவு பெறாது

2006-2009 கொழும்பு மாநகரில், இந்தச் சட்டத்தைக் காட்டி வெள்ளை வானில், தமிழரை நாய் பிடிப்பதை போல் கடத்திக்கொண்டு போனார்கள். அதை எதிர்த்து போராடிய என்னையும் 2007ஆம் ஆண்டு ஒருமுறை கைது செய்தார்கள்; கொலை செய்ய முயன்றார்கள்.

தமிழர்கள் 40 வருடங்களுக்கு மேல் தேசிய, சர்வதேசிய ரீதியாக இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை எதிர்த்து போராடியதால் அது இன்று, ஐ.நா மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் கவனத்துக்கும் வந்துள்ளது.

இப்போது, வசந்த முதலிகே, சிறி தம்ம தேரர் போன்ற சில தென்னிலங்கை சிங்கள போராளிகளையும் இச்சட்டம் பதம் பார்க்கும் போது, திடீரென தூக்கத்தில் இருந்து எழுந்து, வாகனம் பிடித்து, யாழ்ப்பாணத்துக்கு போய், அங்கே யாழ். பல்கலை இளம் பசங்களிடம், "பயங்கரவாத தடை சட்டத்தை எதிர்த்து நாம் போராடுகிறோம். நீங்களும் சேர்ந்து கொள்ளுங்கள்" எனக்கோருவது, 2023இன் மிகச் சிறந்த நகைச்சுவையாக தோன்றுகிறது.

ஆனால், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கு, "இணைகிறோம், ஆனால், எமது பிரச்சினைகளையும் உள்வாங்குங்கள்" என்று யாழ். பல்கலை மாணவர் ஒன்றிய இளைஞர்கள் சரியாக பதில் கூறி உள்ளார்கள் என நான் அறிகிறேன். யாழ். பல்கலை மாணவர் ஒன்றியத்துக்கு என் பாராட்டுகள்.

இதைதான், சமீபத்தில் நடந்து முடிந்த 'அரகல-கிளர்ச்சி' போராட்டத்தின் பின் என்னை வந்து சந்தித்த, அரகல சிங்கள போராளிகளிடமும், அவர்கள் கொழும்பில் நடத்திய கூட்டங்களிலும் சிங்கள மொழியில் நான் சொன்னேன்.

மேலும், "பயங்கரவாத தடைச் சட்டத்தின் வரலாற்றை தெரிந்துக்கொண்டு, சிறைக்கூடங்களில் இருக்கும் நம்மவருக்காகவும் போராட தயார் என்றால். கசப்பான கடந்த காலத்தை மறந்து விட்டு கரம் கோர்க்க தயார் என்று நான் பலமுறை சொல்லியுள்ளேன்" என்றார்.

# சா/த பரீட்சை தாமதிக்கும்

உயர்தர பரீட்சை பெறுபேறுகளை வெளியிட எவ்வளவு நாள்கள் எடுத்துக் கொள்ளப்படுமோ, அது சாதாரண தர பரீட்சையை நடத்துவதில் தாமதத்தை ஏற்படுத்தும் என்றார்.

பரீட்சைகள் திணைக்களத்துக்கு, இரண்டு பரீட்சைகளுக்கு இடையில் குறைந்தது மூன்று மாத இடைவெளி தேவை என்று தெரிவித்த அவர், திட்டமிட்டபடி பரீட்சைகளை நடத்த முடியுமா என்பதை அமைச்சு எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

ஆசிரியர்கள், அதிபர்கள், விரிவுரையாளர்கள் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மாணவர்களின் எதிர்கால நலன் கருதி விடைத்தாள்கள் திருத்தும் பணியை விரைவுபடுத்துமாறு சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.



# புதனன்று முடங்கும்?

இந்நிலையில், புதன்கிழமைக்கு முன்னர் பேச்சுவார்த்தையில் ஈடுபட அரசாங்கம் மறுப்பு தெரிவித்தால் சுகாதாரம், கல்விச்சேவை, நீர் விநியோகம், மின்சாரம், தாதிமார், ஆசிரியர் சேவை, அரச மற்றும் அரசு சார் தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு துறையினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அன்றையதினத்தில் அனைத்து வைத்தியர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

மகப்பேறு மற்றும் சிறுவர் வைத்தியசாலைகள், தேசிய புற்றுநோய் நிறுவனம், தேசிய மனநல நிறுவனம், சிறுநீரக சிகிச்சை பிரிவுகள், இராணுவ வைத்தியசாலைகள், அவசர சிகிச்சைகள் பாதிக்கப்படாது என்றும் அவர் உறுதியளித்தார்.

பேச்சுவார்த்தைக்கு வராவிட்டால் நாளை 15ஆம் திகதி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவர் சன்ன திஸாநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பு லேக்ஹவுஸ் சுற்றுவட்டத்தில் இன்று (14) போராட்டங்கள் இடம்பெறவுள்ளதுடன், இலங்கையின் முக்கிய நகரங்களிலும் போராட்டங்கள் இடம்பெறும் என்றும் தெரியவருகிறது.

# இலங்கையில் முதலி...

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு முதலீட்டு வாய்ப்புகளை வழங்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

புதிய முறையின் கீழ் இலாபம் ஈட்ட தேவையான பணிகளை முடித்துள்ளதால், உத்தேச மறுசீரமைப்பு செயல்முறையை தொடருமாறு கூட்டுத்தாபனத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், சீனாவின் சினோபெக் குழுமத்தின் உயர் அதிகாரம் கொண்ட குழுவின் வருகை இத்தருணத்தில் மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது.

பெற்றோலிய பொருட்களை இறக்குமதி செய்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்யும் நோக்கத்துக்காக சினோபெக் இலங்கை சந்தையில் இணைய உள்ளதாக எரிசக்தி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# மஹிந்தானந்தவிடம்...

மத்துகம நீதிமன்றத்தால் வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டார்.

இந்த விடயம் குறித்து அறிக்கையொன்றை வெளியிட்ட கட்டுப்பாட்டாளர் நாயகம், எம்.பியின் கடவுச்சீட்டு தரவில் மற்றொருவரின் தகவலை ஊழியரொருவர் பதிவேற்றியமையே இதற்கு காரணம் என்றும் அது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஆகியோர் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மத்துகம நீதிமன்றத்தில் தமக்கு எதிராக வழக்கு தொடரப்படவில்லை என்றும் பயணத்தடை விதிக்கப்படவில்லை என்றும் அதிகாரிகளுக்கு அறிவித்த எம்.பி, தனது பயணத்தை இரத்துச் செய்திருந்தார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தால் எம்.பிக்கு எதிராக வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், அவரின் கோரிக்கைக்கு அமைய தடை நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரு எம்.பிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும்

கொழும்பில் திங்கட்கிழமை (13) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவு குறித்து, இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசியதாக செய்திகள் வெளியாகின. தமது பாராளுமன்ற சிறப்புரிமைகளை குறித்த தீர்மானம் மீறுவதாக அவர்கள் கூறியதாகவும் சுட்டிக்காட்டினார்.

எம்.பிக்கள் இருவரினதும் இந்தக் கோரிக்கை உயர் நீதிமன்றத்தின் கண்ணியம் மற்றும் சுதந்திரத்துக்குப் பொருந்தாதது என்று தெரிவித்த அவர், நீதித்துறை சுதந்திரம் பேணப்படுவதை உறுதி செய்ய எம்.பிக்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

மேலும், உயர்நீதிமன்றத்தால் மார்ச் 3 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, ஜனாதிபதி, அரசாங்கம் மற்றும் பாராளுமன்றத்தை சமமாக கட்டுப்படுத்துகிறது என்பது தெளிவாகிறது என்றும் உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தில் தலையிட யாருக்கும் அதிகாரம் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

# தேர்தலுக்கான பட்ஜெட் ஒதுக்கீடு போதுமா?

> அதிக வருமானம் உள்ளவர்களிடம் குறிப்பிட்ட தொகையை வசூலிக்கும் போது போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. இது மிகவும் மனவருத்தத்துக்குரிய நிலை

அன்று சட்டத்தை மீறியவர்கள் இன்று ஜனநாயகம் பற்றி பேசுவது வேடிக்கையாக உள்ளது. அமைதியையும், சட்டத்தையும் ஏற்படுத்திய பின், நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த வேண்டும். மக்களின் வாழ்க்கைச் சுமையை நீக்கி மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும்.

சுற்றுலா பயணிகள் வரும்போது, அவர்கள் தெருக்களில் போராட்டம் நடத்துகின்றனர். பல்கலைக்கழகங்களில் உள்ள அரசியல் கையாட்களை வீதிக்கு கொண்டு வந்து பிரச்சினைகளை உருவாக்குகின்றனர்.

அதன் மூலம் நாட்டுக்கு வரும் சுற்றுலா பயணிகளை அழிக்க முயல்வதை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆட்சேபனைகளுக்கு எதிராக மக்கள் திரளும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இரண்டாவது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

மூன்றாவதாக ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டும். இன்று ஜனநாயகம் பற்றி பேசுபவர்கள் வாக்களிக்க சென்று வாக்களித்த மக்களின் கைகளை வெட்டியவர்கள்.

வாக்குக்காக மக்களைக் கொன்றவர்கள். ஆனால் அரசை கவிழ்க்காமல் எங்கள் பொறுப்பை நிறைவேற்ற தயாராக உள்ளோம்.

கேள்வி: கடந்த காலங்களில் போராளிகளால் பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் யாரும் தண்டிக்கப்படுவதாகத் தெரியவில்லை. அது நியாயமற்றது. எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன?

பதில்: அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் அதற்கு முன் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். நாட்டில் பொருளாதாரம் வலுப்பெற்று சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்படும் போது வீடுகளுக்கு தீ வைப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

கேள்வி: அப்படியானால் நாங்கள் தேர்தலை எதிர்பார்க்க முடியாதா?

பதில்: நாங்கள் தேர்தலுக்கு தயாராகி வருகிறோம்.

கேள்வி: வாக்கெடுப்பு நடத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது இல்லையா?

பதில்: தேர்தலுக்கு ஒதுக்கப்படும் பணத்தை வேறு நோக்கங்களுக்காக ஒதுக்கக் கூடாது என்று நீதிமன்றம் கூறியுள்ளது. நாங்கள் அதைச் செய்யவில்லை. ஆனால், ஒதுக்கப்பட்ட பணம் தேர்தலுக்கு போதுமா என்பதை தேர்தல் ஆணைக்குழு சிந்திக்க வேண்டும். நாங்கள் கட்சியாக தேர்தலுக்கு தயாராக உள்ளோம்.

நாடு, நிர்வாகம், சட்டமன்றம், நீதித்துறையால் ஆளப்படுகிறது. இந்த மூன்றும் இணைந்து செயற்பட வேண்டும். சட்டமன்றத்தில் பிரச்சினை என்றால் அதுபற்றி பேச உரிமை உண்டு. நல்லாட்சி அரசாங்கத்தின் போது மாகாண சபைத் தேர்தல் திகதி குறிப்பிடப்படாமல் பிற்போடப்பட்டமையே எனது வருத்தம்.

இன்று நீங்கள் பேசும் நபர்கள் அன்று எங்கே இருந்தார்கள்? அப்போது ஏன் பேசவில்லை? மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உள்ளவர்கள் ஏன் பேசவில்லை? இன்று நாடு நெருக்கடியில் இருக்கும்போது இதை மட்டும் ஏன் பேச வேண்டும்? வரியைக் குறைக்கக் கோரி மருத்துவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அனைவருக்கும் ஒரே வரிதான். அதிக வருமானம் உள்ளவர்களிடம் இருந்து குறிப்பிட்ட தொகையை வசூலிக்கும் போது போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. இது மிகவும் மனவருத்தத்துக்குரிய நிலை" என்றார்.

# விசாரணைக்கு அழைக்கவில்லை

நீர்த்தாரை மற்றும் தடிகளை பயன்படுத்தியதாக முறைப்பாடுகளும் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் பொறுப்பான பிரதான அமைப்பாக எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தும் வகையில் இந்த நிலைமை குறித்து பரிசீலிக்கப்பட வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், இந்த நிலைமை தொடர்பான விசாரணை நடவடிக்கைகளை ஆணைக்குழு ஆரம்பித்துள்ளதாகவும் சம்பந்தப்பட்ட எந்தவொரு பிரஜையையும் வரவழைத்து விசாரணை செய்வதற்கும் அவர்களிடமுள்ள ஆவணங்களைச் சரிபார்த்தல் உட்பட விசாரணை செய்வதற்கும் தமக்கு சட்டபூர்வ அதிகாரம் உள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# பைபிளுடன் நடமாடிய நபர் கைது

பின்னர், அருகிலுள்ள வை.எம்.சி.ஏவுக்கு அருகாமையிலுள்ள கிறிஸ்தவ சபை ஒன்றுக்குள் தலையில் தொப்பி அணிந்தவாறு பைபிளுடன் சென்று நடமாடியுள்ளார்.

இதையடுத்து அங்கு ஆராதனையில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் அவர் மீது சந்தேகம் கொண்டு அவரை மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததை அடுத்து, அவரைக் கைது செய்துள்ளதாகவும் கைது செய்யப்பட்டவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆணைக்குழுவில்...

ஆணைக்குழுவின் ஏனைய நான்கு உறுப்பினர்களும் அழைப்பாணை குறித்து அறிந்திருக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும், இந்தத் தீர்மானம் தொடர்பில் அமைச்சர், மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலம் அறிவிப்பார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மார்ச் 7, 8 ஆம் திகதிகளில் கொழும்பு மற்றும் களனி பல்கலைக்கழகங்களில் நடத்தப்பட்ட போராட்டங்களைக் கட்டுப்படுத்த பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்துவதற்கு ஆணைக்குழு தீர்மானித்து அழைப்பாணை பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விமலுக்கு பிடியாணை

> அனுமதியின்றி ஒலிபெருக்கியைப் பயன்படுத்தியதுடன், வாகன நெரிசலை உண்டாக்கி மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தினர்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் ஷெய்ட் ராட் அல் ஹுசைனின் இலங்கை விஜயத்தை எதிர்த்து, 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி, கொழும்பு - 07, பௌத்தாலோக மாவத்தையிலுள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகத்துக்கு முன்னால், விமல் எம்.பி உட்பட குழுவினரால், போராட்டம் நடத்தப்பட்டது.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, வீரகுமார திஸாநாயக்க, பியசிறி விதானகே, மொஹமட் முஸம்மில், ஜயந்த சமரவீர எம்பி, ரொஜேர் செனவிரத்ன ஆகியோருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அனுமதியின்றி ஒலிபெருக்கியைப் பயன்படுத்தியதுடன், வாகன நெரிசலை உண்டாக்கி மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் கறுவாத் தோட்ட பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

# மலையகத்துக்கான தனி வீட்டுத் திட்டத்தை அமல்படுத்தும்...

இந்திய அரசின் நிதி பங்களிப்புடன், மலையகத்தில் முன்னெடுக்கப்பட்ட வீடமைப்பு திட்டத்தில் ஒரு வீட்டுக்கு 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்டிருந்தது.

எனினும், பணவீக்கம் உள்ளிட்ட காரணங்களால் தற்போது ஒரு வீட்டை நிர்மாணிப்பதற்கு சுமார் 28 இலட்சம் ரூபாய் அவசியம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் 4 ஆயிரம் தனி வீட்டு திட்டத்தை முழுமைப்படுத்துவதற்காக, அத்திட்டத்தில் எஞ்சியுள்ள வீடுகளை புதிய மதிப்பீட்டு விலையின்கீழ் நிர்மாணிப்பதற்கான உடன்படிக்கை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தலைமையில் இந்திய இல்லத்தில் நேற்று (13) நடைபெற்றது.

இந்நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான், "2020 ஆம் ஆண்டில் நான் இராஜாங்க அமைச்சராக பதவியேற்கும்போது இந்தியாவின் 4 ஆயிரம் வீட்டு திட்டம் அமல்படுத்தப்பட்டு வந்தது. 699 வீடுகளே முழுமைப்படுத்தப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டிருந்தது. சுமார் 2 ஆயிரம் வீடுகளில் மின்சாரம், நீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இருக்கவில்லை. அவற்றை முழுமைப்படுத்தி பயனாளிகளிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தேன்.

இதற்கிடையில் கொரோனா அதன்பின்னர் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் இந்திய வீட்டு திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது" என்றார்.



கிராமங்களுக்குள் போதைப்பொருள்

# ஒன்று திரண்ட அமைப்புகள்

■ க. அகரன்

வவுனியா, பூந்தோட்டம் பகுதிகளை அண்மித்த கிராமங்களுக்குள் போதைப்பொருள் பாவனை அதிகரித்துச் செல்கின்றமை தொடர்பாக, பொது அமைப்புகள் ஒன்றுகூடி நேற்று (13) ஆராய்ந்தன.

குறிப்பாக பூந்தோட்டம், பெரியார்குளம், சிறிநகர், மதீனாநகர், மகாஇறம்பைக் குளம், அண்ணாநகர் போன்ற கிராமங்களுக்குள் போதைப்பொருள் பாவனையின் தாக்கம் அதிகரித்துச் செல்வதுடன், சிறுவர்களை இலக்குவைத்து இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஏற்படும் கலாசார சீரழிவுகளைத் தடுப்பதற்கான விரைவான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக, குறித்த கிராமங்களைச் சேர்ந்த சுமார் 10க்கும் மேற்பட்ட பொது அமைப்புகள் இவ்வாறு ஒன்றுகூடி ஆராய்ந்தன.

இதன்போது, முதற்கட்டமாக நீதவான், மாவட்டச் செயலாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர், பிரதேச செயலாளர், விசேட அதிரடிப்படை, மதுவரித் திணைக்களம் ஆகிய தரப்புகளுக்கு உடனடியாக குறித்த விடயத்தை தெரியப்படுத்தி, விரைவான நடவடிக்கைகளை எடுப்பதற்கு வலியுறுத்துவதாக தீர்மானிக்கப்பட்டது.

மேலும், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்களில் போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.



எரிபொருள் நிரப்பு நிலைய

## ஊழியர்களை மிரட்டியவர்கள் மீது பொலிஸ் முறைப்பாடு

■ எம்.றொசாந்த்

"நாவற்குழி சம்பவம் தெரியும் தானே... அப்படி சம்பவம் செய்வோம்" என எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களை மிரட்டியவர்கள் தொடர்பில், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கைதடி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் திடீரென ஏற்பட்ட பழுது காரணமாக, திருத்த வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், நேற்று முன்தினம் (12) இரவு 09 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், தமது மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருள் நிரப்புமாறு கூறியுள்ளனர்.

அதற்கு, "திருத்த வேலை நடைபெறுவதால், எரிபொருள் நிரப்ப முடியாது" என ஊழியர்கள் கூறியுள்ளனர். அதனை அடுத்து ஊழியர்களுடன் முரண்பட்டு , "நாவற்குழி சம்பவம் தெரியும் தானே... அப்படி சம்பவம் செய்வோம்" என மிரட்டி விட்டு, அங்கிருந்து சென்றுள்ளனர்.

இது தொடர்பில், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பொறியியலாளர் வீட்டில் திருட்டு

■ செந்தூரன் பிரதீபன்

கொக்குவில் பகுதியில் கணினி பொறியியலாளர் ஒருவரின் வீட்டிலிருந்து ஒரு இலட்சத்து 41,000 ரூபாய் பணம் திருடப்பட்டமை தொடர்பில், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில், மூன்று தடவைகள் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில், அயல் வீட்டுக்காரரிடம் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடல் மணல் கடத்தல்:

## சாரதி தப்பியோட்டம்; டிப்பர் கைப்பற்றப்பட்டது

■ செந்தூரன் பிரதீபன்

அனுமதிப்பத்திரம் இன்றி கடல் மணலை டிப்பர் வாகனத்தில் ஏற்றிவந்த சாரதி, பொலிஸாரைக் கண்டதும் தப்பியோடியுள்ளார்.

நேற்று (13) இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து, டிப்பர் வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - பலாலி பிரதான வீதியில், வயாவிளான் மத்திய கல்லூரிக்கு அருகாமையில், இந்த வாகனம் கைப்பற்றப்பட்டதாக பலாலி பொலிஸார் தெரிவித்தனர். கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய, டிப்பர் வாகனம் வரும் வழியில் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.





பஸ்கள் ஏற்றிச் செல்லாமையால்

## பரீட்சைக்கு செல்லமுடியாது வீதியில் தவிக்கும் மாணவர்கள்

**'அதிகாரிகள் கவனிக்காவிட்டால் ஏ9ஐ மூடுவோம்"**

■ சண்முகம் தவசீலன்

ஏ9 வீதியில் அதிகளவான பொதுப் போக்குவரத்துச் சேவைகள் இருந்தும், அவை பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லாமையால், பாடசாலை செல்லவும் மீண்டும் பாடசாலையில் இருந்து வீடு திரும்பவும் மாணவர்கள் பெரும் சிரமப்படுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பனிக்கன்குளம், கிழவன்குளம் பகுதிகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களே இவ்வாறு வீதிகளில் தவிக்கின்றனர்.

இது தொடர்பாக பல்வேறு தரப்பினருக்கும் குறிப்பாக, வட மாகாண ஆளுநர், வட மாகாண போக்குவரத்துத் துறை சார்ந்த உயர் அதிகாரிகள், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பலருக்கும் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில், பரீட்சை நடைபெறும் இந்தக் காலப்பகுதியிலும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு பஸ்கள் ஏற்றாமல் செல்வதால், வீதியை மறித்து பாரிய போராட்டம் ஒன்றை செய்தபோது, இந்த விடயம் தொடர்பில் மாங்குளம் நீதிமன்றுக்கு பொலிஸார் கொண்டு சென்று, வட மாகாண போக்குவரத்துப் பிரிவினருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

அத்துடன், இலங்கை போக்குவரத்துச் சபை உயர் அதிகாரிகளால் மாணவர்களை பருவகால சிட்டை பெறுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. மாணவர்கள் பருவகால சிட்டையை பெற்றும்



எந்தவித முன்னேற்றமும் இல்லை. மாறாக, பருவகால சிட்டை பெற்ற பின்னர், பஸ்கள் ஏற்றிச் செல்லாமை அதிகரித்திருப்பதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான பின்னணியில், பாடசாலையில் பரீட்சை நடைபெறுகின்ற நிலையில், நேற்று (13) காலை 8.12 மணி வரை மாணவர்களை எந்த பஸ்ஸும் ஏற்றாமல் சென்ற நிலையில், மாணவர்கள் தவித்து நின்றனர்.

இதையடுத்து, மாங்குளம் போக்குவரத்து பொலிஸார் அழைக்கப்பட்டு, மாணவர்கள் பஸ்களில் ஏற்றிவிடப்பட்டுள்ளனர்.

குறித்த பஸ் நடத்துநர் கூட, பொலிஸாருடன் வாக்குவாதம் பட்டே பஸ்லில் மாணவர்களை ஏற்றிச் சென்ற அதேவேளை, குறித்த விடயங்களை ஒளிப்பதிவு செய்த ஊடகவியலாளருக்கும் அச்சுறுத்தல் விடுத்துச் சென்றார்.

தொடரும் இந்த அவலநிலைக்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இல்லையேல் ஏ9 வீதியை மூடி, மாபெரும் போராட்டம் மேற்கொள்வதை தவிர வேறு வழியில்லை எனவும் பெற்றோர் எச்சரித்துள்ளனர்.

யானைகளால் உண்டாகும் பாதிப்பை

# கட்டுப்படுத்தல் தொடர்பில் ஆராய்வு

■ நூறுல் ஹுதா உமர்

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் விவசாய நடவடிக்கைகள் முடிவுற்று அறுவடை இடம்பெற்று வருவதால் யானைகளின் தொல்லையும் அதிகரித்துள்ளது.

இதனால் உயிர்ப்பலிகளும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

யானைகளின் வருகை தொடர்பிலும், யானைகளின் மூலம் ஏற்படும் பாதிப்புகளை கட்டுப்படுத்துவது தொடர்பிலும் ஆராயும் கலந்துரையாடல், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல். எம் மாஹிருக்கும், இலங்கை அடிப்படை மனித உரிமைகள் அமைப்பினருக்கும் இடையில் சம்மாந்துறை பிரதேச சபை கட்டடத்தில் நேற்று (13) இடம்பெற்றது.



இந்தக் கலந்துரையாடலில், இலங்கை அடிப்படை மனித உரிமைகள் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஈ.எம்.பி. டேனியல், கிழக்கு மாகாண பணிப்பாளர் எம். நளீர் அபூபக்கர், அம்பாறை மாவட்ட பணிப்பாளர் எஸ். அருண் உட்பட பலரும் கலந்துகொண்டு, சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிருடன் யானைகளின் பாதிப்புகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடினர்.

இதன்போது சம்மாந்துறை, நெய்னாகாடு, மல்வத்தை, மஜீத்புரம், நாவிதன்வெளி, மாவடிப்பள்ளி போன்ற பிரதேசங்களில் யானைகளால் ஏற்படுத்தப்படும் தொல்லைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டன.

அத்துடன், பாதிப்புகளை கட்டுப்படுத்த தன்னால் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்கிய தவிசாளர் மாஹீர், தொடரந்து எதிர்காலத்தில் தான் இது தொடர்பில் எடுக்கவுள்ள நடவடிக்கைகளை இலங்கை அடிப்படை மனித உரிமைகள் அமைப்பினருக்கு விளக்கினார்.

மட்டு. சிறைச்சாலை

## உத்தியோகத்தர்கள் பாராட்டிக் கௌரவிப்பு





■ எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு தேசிய ரீதியில் வரலாற்று சாதனையை முதல்தடவையாக பெற்றுக்கொடுத்த சிறைச்சாலை உத்தியோகத்தர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு, மட்டக்களப்பில் நேற்று முன்தினம் (12) நடைபெற்றது.

மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் ந.பிரபாகரன் தலைமையில், மட்டக்களப்பு சிறைச்சாலை வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், அதிதிகளுக்கும், விளையாட்டு வீரர்களுக்கும் மலர் மாலை அணிவிக்கப்பட்டு, வரவேற்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வின் சிறப்பு அதிதியாக தேசிய பயிற்றுவிப்பாளரும், சாண்டோ சங்கரதாஸ் விளையாட்டு கழகத்தின் பயிற்றுவிப்பாளரும், இந்து கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியருமான வே.திருச்செல்வம் கலந்துகொண்டார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர், கல்முனை சிறைக்கூடத்தின் நிர்வாக உத்தியோத்தர் உள்ளிட்ட மட்டக்களப்பு சிறைச்சாலையின் உயரதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

தேசிய ரீதியில் சாதனையை நிலைநாட்டிய வீரர்களுக்கு பதக்கம் அணிவித்து, சான்றிதழ், பணப்பரிசு உள்ளிட்ட நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இச்சாதனைய்ய படைப்பதற்கான பயிற்சியை வழங்கிய பயிற்றுவிப்பாளர் வே.திருச்செல்வம், சிறைச்சாலை அத்தியட்சகரால் கௌரமளிக்கப்பட்டதுடன், பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் முதல் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு புதிய சிறைச்சாலை அத்தியட்சகராக ந.பிரபாகரன் கடமைகளைப் பொறுப்பேற்றதன் பிற்பாடு, தொடர்ச்சியாக மட்டக்களப்பு சிறைச்சாலையின் உத்தியோகத்தர்கள் பல்வேறு துறைகளிலும் முன்னிலை வகித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நந்தவனம் பவுண்டேசனின்

## சாதனைப் பெண்களுக்கு விருது வழங்கும் விழா







■ பாறுக் ஷிஹான்

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, நந்தவனம் பவுண்டேசன் வருடாந்தம் நடத்தும் விருது வழங்கும் விழா சென்னை, நுங்கம் பாக்கத்தில் உள்ள பார்க் எலேன்ஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் (12) நடைபெற்றது.

லிம்ரா பேக்ஸ் பிரைவட் லிமிட்டெட் நடத்திய இவ்விழாவில், இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், தினகரன் வார மஞ்சரி பத்திரகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், சென்னை மதுரா டிரவல்ஸ் நிறுவனத்தின் தலைவர் வி.கே. டீ. பாலன், கனடா விழித்தெழு பெண்கள் அமைப்பின் இயக்குநர் சசிகலா நரேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

நந்தவனம் பவுண்டேசனின் தலைவர் நந்தவனம் சந்திசேகர் இதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டிருந்தார்.

இந்த விழாவில் 25 பெண்கள் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இலங்கையை சேர்ந்த அமிர்தரத்தினம் றுத்றா, சந்திரிகா நீரோசன், கீர்த்திகா மித்ரன், தஸ்யானி ரந்தீப், கவிதா பாரதி, பிரபா அன்பு ஆகியோர் உட்பட 25 பேருக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இவர்களைத் தவிர இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பெண்களுக்கும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

## துப்பாக்கி காயங்களுடன் காட்டு யானை மீட்பு

■ எப்.முபாரக்



திருகோணமலை மாவட்டத்தின் சேருவில, ஸ்ரீமங்களபுர காட்டுப்பகுதிக்குள் காலில் துப்பாக்கியால் சுடப்பட்ட காயங்களுடன் காட்டு யானை மீட்கப்பட்டுள்ளதாக சேருநுவர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வன ஜீவராசிகள் அதிகாரிகளுக்கும் பொலிஸாருக்கும், அப்பகுதி மக்கள் வழங்கிய தகவலை அடுத்து, ஸ்ரீ மங்களபுர காட்டுப் பகுதிக்கு அதிகாரிகள் சென்று, குறித்த யானைக்கு சிகிச்சை அளித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யானைக்கு, மகாவலி வலய விலங்கு கால்நடை வைத்தியர்களால் தொடர்ந்து உணவு வழங்கப்பட்டு வருவதாகவும் வன ஜீவராசி அதிகாரிகளால் சிகிச்சைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



# வணக்க ஸ்தலங்களுக்கு பொருட்கள் கையளிப்பு

■ பி.கேதீஸ்

நுவரெலியா பிரதேச சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட சில தோட்டங்களிலுள்ள வணக்க ஸ்தலங்களுக்கு, கூடாரங்கள் மற்றும் கதிரைகள் வழங்கிவைக்கப்பட்டன.

அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கு அமைவாக, பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரனால் இவை ஞாயிற்றுக்கிழமை (12) வழங்கி வைக்கப்பட்டன.

நுவரெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட டெஸ்போர்ட் மேற்பிரிவு, சின்ன மட்டுக்கலை, பெரிய மட்டுக்கலை ஆகியவற்றின் அம்மன் ஆலயங்கள், சென் கூம்ஸ் கத்தோலிக்க தேவாலயம் ஆகியவற்றுக்கே இந்தப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன.

# மரங்களை நாட்டும் பணி



■ சிவாணி ஸ்ரீ

அரச மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புடன் சப்ரகமுவ மாகாணத்தில் மரக்கன்றுகளுக்கு பதிலாக மரங்கள் நாட்டும் வேலைத்திட்டம், சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவால் நிவித்திகல, யக்தெஹிவத்த கிராமத்தில் வெள்ளிக்கிழமை (10) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சப்ரகமுவ மாகாண சபை, நிவித்திகல பிரதேச செயலகம். அகலவத்தை பெருந்தோட்ட நிறுவனம் என்பன இணைந்து மேற்படி மரக்கன்றுகளுக்கு பதிலாக மரங்களை நாட்டும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலையக கல்வி அபிவிருத்திக்காக

# ஒன்றிணைய அழைப்பு

■ எஸ்.கே. குமார்

மலையக பெருந்தோட்ட மாணவர்களின் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு மலையக கல்விமான்கள், தொழிலதிபர்கள், சமூக ஆய்வாளர்கள், மலையக தொழிற்சங்க அரசியல்வாதிகள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென விஷ்ணு ஆரோஹனம் தலைவரும் சமூக சேவையாளருமான கலாநிதி சதானந்தன் திருமுருகன் அழைப்பு விடுத்துள்ளார்.

சமூக பொருளாதார பிரச்சினைகள், வருமானம் மற்றும் வசதிகள் குறைவால், கல்வியில் பின் தங்கியுள்ள மலையக பெருந்தோட்ட மாணவர்களின் கல்வியை அபிவிருத்தி செய்வதற்காக, ‘பெருந்தோட்ட மாணவர்களின் கல்வி அபிவிருத்தி மையம்’ என்ற அமைப்பை ஆரம்பித்து, அதனூடாகவே ஒன்றிணைய வேண்டுமென அழைத்துள்ளார்.

கல்விப் புரட்சி மூலம் மலையக பெருந்தோட்ட பகுதியில், சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அதற்கான ஒரு பாலமாக இந்த அமைப்பை உருவாக்கி, இந்த அமைப்பின் மூலம் ஒரு நிதியம் ஆரம்பித்து, அந்த நிதியின் மூலம் மலையக பெருந்தோட்ட மாணவர்களுக்கு உதவிகளைச் செய்யமுடியும் என்றார்.



பாடசாலை உபகரணங்கள், புலமை பரிசில்கள், தனியார் வகுப்புகள் மூலம் மாணவர்களுக்கு இலவசமாக கற்பித்தல், கல்வி செயலமர்வுகள், மிகவும் வறுமையான குடுபத்திலுள்ள மாணவர்களின் கல்விச் செலவை பொறுப்பேற்றல் உட்பட, பெருந்தோட்ட பகுதியில் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக இந்த அமைப்பை உருவாக்க ஒன்றிணைவோம் என்றார்.

கிடைக்கும் வருமானத்தை வைத்துக்கொண்டு, குடும்ப வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதற்கே பெருந்தோட்ட தொழிலாளர்கள் பெரும் சிரமப்படுகின்றார்கள். பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்க வேண்டும் என்ற ஆர்வம் பெற்றோர்களிடம் இருந்த போதிலும், அதைச் செயற்படுத்த அவர்களுக்கு கிடைக்கும் ஊதியம் போதாமையால் தொடர்ந்து கல்வி கற்பிக்க பெற்றோர் அவஸ்தப்படுகின்றார்கள். இதனால் பிள்ளைகள் கல்வியை இடையில் நிறுத்திவிட்டு, தொழிலுக்குச் செல்கின்றார்கள். இவர்களின் கல்வியை இடையில் நிறுத்தாமல், தொடர்ந்து கல்விக்கற்க நாம் மனிதாபிமானத்துடன் உதவி செய்ய ஒண்றிணைவோம் என்றார்.

ஒரு தனிப்பட்ட மனிதனால் செய்கின்ற சேவையை விட, பலர் ஒன்று சேர்ந்தால் ஒரு சமூகத்தை முன்னேற்ற முடியும். 2017ஆம் ஆண்டில் ‘விஷ்ணு ஆரோஹனம்’ எனும் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. அதனூடாக மலையகத்தில் கல்வித் திட்டங்கள், சத்துணவு வேலைத்திட்டங்கள் என்பவற்றை இன்று வரை முன்னெடுத்து வருகின்றோம் என்றார்.

# மகளிர் தின விழா

■ எம்.கிருஸ்ணா

தொழிலாளர் தேசிய சங்கம், தொழிலாளர் தேசிய முன்னணி ஆகியவற்றின் இவ்வருட மகளிர் தின விழா, டிக்கோயா என்பீல்ட் தாயகம் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (12) நடைபெற்றது.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் மகளிர் அணி தலைவி திருமதி. சரஸ்வதி சிவகுரு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், பிரதம அதிதியாக தொழிலாளர் தேசிய சங்கம், தொழிலாளர் தேசிய முன்னணி ஆகியவற்றின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் கலந்துகொண்டார்.

விசேட அதிதியாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் கலந்து கொண்டார்.





# சிறுமியுடன் வீட்டில் இருந்த சிறுவன் கைது

■ சுமணசிறி குணத்திலக்க

14 வயதான சிறுமியை வீட்டுக்குள் தடுத்து வைத்திருந்ததாகக் கூறப்படும் அச்சிறுமியின் காதலனான 16 வயதான சிறுவனும் அச்சிறுமியும் தொம்பஹாவெல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் வீட்டுக்கு வருமாறு தனது காதலியை காதலன் அழைத்துள்ளார். சிறுமி தரம் 9இல் கல்விப்பயில்பவர் என்றும் அச்சிறுவன் தரம் 10இல் கல்வி பயில்பவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தனது காதலனின் அழைப்பை ஏற்று, காதலியும் வீட்டுக்கு வந்துள்ளார். இதுதொடர்பில் அக்கம் பக்கத்தினர் வழங்கிய தகவல்களின் பிரகாரம், இவ்விருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அச்சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரா என்பது தொடர்பில் சோதனைக்கு உட்படுத்துவதற்காக, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான மாணவனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# அரவம் தீண்டியதில் தாய் மரணம்

■ சுமணசிறி குணத்திலக்க

புத்தல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குடியிருப்பு பிரதேசத்தில், பாம்பு தீண்டியதில் இரண்டு பிள்ளைகளின் தாயான 62 வயதான பெண் மரணமடைந்துள்ளார்.

குடியிருப்புக்கு அருகிலுள்ள பற்றைக்காட்டுக்குள் விறகு சேகரிப்பதற்காக சென்றிருந்த போதே பாம்பு தீண்டியுள்ளது. அதுதொடர்பில் உறவினர்களுக்கு வழங்கிய தகவல்களின் பிரகாரம் அந்தப் பெண், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்; எனினும், உயிரிழந்துள்ளார்.

# வங்கிகள் இயங்கின

■ பாலித ஆரியவங்ச

வரி அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வங்கிச் செயற்பாடுகளில் இருந்து விலகியிருப்பதாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், பதுளையில் அரச மற்றும் தனியார் வங்கிகள் யாவும் நேற்று (13) வழமை போல இயங்கின.

எனினும், சில வங்கிகளின் ஊழியர்கள், கறுப்பு ஆடைகளை அணிந்திருந்தனர். இன்னும் சிலர், வர்ண ஆடைகளை அணிந்து கடமைக்கு சமூகமளித்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மாணிக்கக்கல் அகழ்ந்த மூவர் அதிரடியாக கைது

■ ரஞ்சித் ராஜபக்ஷ


சிவனொளிபாதமலை இயற்கை வனாந்தரத்துக்குள் அத்துமீறி நுழைந்து, மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் பொகவந்தலாவை பொலிஸாரால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த வனாந்தரத்துக்குள் சட்டவிரோதமாக நுழைந்த மூவர், சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டுள்ளனர் எனக் கிடைத்த தகவல்களுக்கு அமையவே, இந்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், அவர்கள் பயன்படுத்திய ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மூவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பதுடன், அவர்களுக்கு எதிராக ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தின் ஊடாக சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.



# “நீரூற்று பகுதிகளை பாதுகாப்போம்”



■ காமினி பண்டார இலங்கதிலக்க

மஸ்கெலியா, ஸ்டெஸ்பி தேயிலைத் தோட்டத்தில் நீரூற்றுகள் இருக்கும் பிரதேசங்களைப் பாதுகாக்கும் நோக்கில் மரக்கன்றுகள் நடப்படும் வேலைத்திட்டம் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

நீரூற்றுகளை பாதுகாத்தல், வனாந்தரங்களுக்கு தீமூட்டுவதை கட்டுப்படுத்தல் உள்ளிட்டவை தொடர்பில் பிரதேசத்துள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தெளிவூட்டும் செயற்பாடுகள் சாமிமலை, கவரவிரவல, தேவகந்த ஆகிய பாடசாலைகளில் இடம்பெற்றன.

நீரூற்று பகுதிகளை பாதுகாக்கும் வகையில், சுமார் 380 மரக்கன்றுகள், அன்றையதினம் நாட்டிவைக்கப்பட்டன.

வனஜீவராசிகள் திணைக்களத்தின் ஹட்டன் காரியாலயம், ஸ்டெஸ்பி தோட்ட நலன்புரி சங்கத்தின் ஊடாக, இந்த வேலைத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தேர்த்திருவிழா

இரத்தினபுரி, மாவளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் வருடாந்த தேர்த்திருவிழா சனிக்கிழமை (11) நடைபெற்றது.

உமாமகேஷ்வரி

# பந்தமேந்தி எதிர்ப்பு

■ எஸ்.கே. குமார்

மின்சாரக் கட்டண அதிகரிப்பை எதிர்த்து, ஹேவாஹெட்ட, ரத்துகுறுஸ கிராம ரட்லான்டீ பிரதேச பொது மக்கள், ஞாயிற்றுக்கிழமை (12) இரவு தீப்பந்தம் மற்றும் பதாகைகள் ஏந்தியவாறு அரசாங்கத்துக்கு எதிராக தங்களது எதிப்பைத் தெரிவித்தனர்.



# நீலிக்கண்ணீர் வடிப்போர் தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும்

தென்னிலங்கையில் மிகவும் சர்ச்சைக்குரியவரும் அவ்வப்போது சிறைவாசம் அனுபவித்து, பிணையில் வெளியே வருபவருமான வசந்த முதலிகே, யாழ்ப்பாணத்துக்குச் சென்று, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைமையிலேயே இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

பேச்சுவார்த்தைக்குப் பின்னர் கருத்துரைத்த வசந்த முதலிகே, தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியிலான போராட்டத்துக்கு தாம் ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாகவும் அரசாங்கத்தின் அடக்கு முறைகளுக்கு எதிராக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து குரல்கொடுப்பதற்குத் தாம் தயார் என்றும் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலத்த யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அழகராசா விஜயகுமார், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், தெற்கில் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினால் இணைந்து செயற்படுவது தொடர்பில் ஆராயப்படும் என்று பதிலடிகொடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில் போராட்டம், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான கெடுபிடிகள், நீண்டநாள் சிறைவாசம், வழக்குகள் விசாரணைக்கு உட்படுத்தாமலே காலந்தாழ்த்துவது, இன்றேல் வழக்கு தாக்கல் செய்யப்படாமலே சந்தேகத்தின் பேரில் தடுப்புக் காவலில் வைத்திருப்பது ஒன்றும் புதிதல்ல.

காணாமலாக்கப்பட்ட உறவினர்களின் போராட்டமும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது. காணிசுவீகரிப்பு, அரசாங்கத்துக்கு எதிரான அடக்குமுறைக்கு எதிராக குரல்கொடுக்கப்படும் போதெல்லாம், தென்னிலங்கை அரசியல் கட்சிகளும், சமூக அமைப்புகளில் சிலவும், மாணவர்கள் சங்கங்களும் மௌனம் காத்துவந்தன; இன்னும் மௌனம் காக்கின்றன.

அரசாங்கத்தின் அடக்குமுறை, தங்களுக்கும் சிங்கள மக்களுக்கும் எதிராகவும் பிரயோகிக்கப்படும் இவ்வேளையில்தான், ஞானம் பிறந்திருக்கிறது; இது வரைவேற்கத்தக்கது! எனினும், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பிலான வசந்த முதலிகேயின் பதில், பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தை சந்திப்பதற்கு முன்னர், வசந்த முதலிகே தலைமையிலான அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், நாட்டிலுள்ள ஏனைய பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்களை சந்திக்காதது ஏன் என்பது, பெரும் கேள்வியாகும்.

மக்கள் விடுதலை முன்னணி அல்லது முன்னிலை சோஷலிஸ கட்சியுடன் இணைந்து பயணிப்பவர் வசந்த முதலிகே என்ற குற்றச்சாட்டு உள்ளது. இணைந்திருந்த வடகிழக்கை பிரித்ததன் முழு பங்கும் ஜே.வி.பியையே சாரும்.

இந்நிலையில், 13ஆவது திருத்தம் முழுமையாக நீக்கப்படவேண்டும் என வலியுறுத்துவது, தென்னிலங்கையின் ஆதரவைத் திரட்டிக்கொள்ளும் சூழ்ச்சியாகவும் கொஞ்ச அதிகாரத்தையேனும் அனுபவிக்கும் சிறுபான்மையினரின் உரிமைகளை அபகரிக்கும் சூட்சுமமாகவும் இருக்கக்கூடும்.

ஆகையால், வசந்த முதலிகேயின் அழைப்புக்கு, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தக்க பதிலை அளித்துள்ளது என்பதுடன், இருக்கும் உரிமைகளையும் பறிப்பதற்காக நீலிக்கண்ணீர் வடிப்போர் தொடர்பில், சிறுபான்மையினர் அவதானமாக இருக்கவேண்டும் என்பதே எமது அவதானிப்பாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

மனிதர்களுக்கு எதிர்பாராத மாற்றங்கள் என்றும் நடந்தபடிதான் இருக்கும். சர்வாதிகாரிகளின் பதவி பறிபோனால், அவர்களை எவர்தான் மதிப்பார்கள்?

நித்தியமானதே இந்த உலகம் எனக் கனவுகாணும் மக்கள் கண் முன்னே, நிகழும் மாற்றங்களை நம்பமுடியுமா?

அரசியல்வாதிகள் இந்தப் பூமியில் தாங்களும் ஒரு துகள் என ஒத்துக்கொள்ள மாட்டார்கள். மனச்சாட்சிக்கு ஊறுவிளைவிக்காமல் வாழ்ந்தவர்கள்தான், உலக யதார்த்தம் எதுவென அறிந்துகொள்கின்றார்கள்.

மமதை கொண்டவர்கள், புத்தியைப் பறிகொடுக்கிறார்கள். அதுவே நிலையானது என, தனது கர்வங்களை விஸ்தரித்தபடி இயங்குகின்றார்கள்.

தோல்விகள் தொடரும்போதுதான், தங்களின் அறியாமையை உணர்கின்றார்கள். மக்களை பேதமற நோக்குபவனே, உண்மையான மனிதனாகின்றான்.

பேதம் காட்டுபவன், எவரது உதவிகளும் இன்றி, ஏதிலியாகி விடுகின்றான். எல்லோரிடமும் நேயத்தடன் வாழ்வதே, தங்களுக்கான பண்பு என உணர்ந்து செயற்பட வேண்டும். வீண்கௌரவங்கள் வளர்ச்சிக்குத் தடை. அரவணைப்பே உலகின் ஏற்றம்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

மாற்றத்தைக் கொண்டுவர

# முதலில் மக்கள் திருந்த வேண்டும்

மொஹமட் பாதுஷா

நாட்டில் மாற்றம் வேண்டும் என்றும் அரசியல் கலாசாரம் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்றும் அரசியல்வாதிகள் திருந்த வேண்டும் என்றும் 'இலங்கை சமூகம்' நீண்டகாலமாக வேண்டி நிற்கின்றது. இன்று வரை இதற்கான மக்கள் போராட்டங்களும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

ஆனால், அது கைகூடவில்லை! கிடைத்த வாய்ப்புகள் கூட, ஏதோ ஒரு காரணத்தால் கைநழுவிப் போனதைக் கண்டிருக்கின்றோம். ஆட்சியாளர்கள், அரசாங்கங்கள், ஜனாதிபதிகள், ஆளுகைக்கான கூட்டுகள் மாறியதே தவிர, வேறெதுவும்ம் நடந்து விடவில்லை.

புதிய கருத்தியல், மாற்றுக் கொள்கைகள், வித்தியாசமான அணுகுமுறைகளுடன் அரசியலுக்கு வந்த பெருந்தேசியத் தலைவர்கள் மட்டுமன்றி, ஒரு சாதாரண அரசியல்வாதி கூட பெரும்பாலும் மக்களால் கண்டுகொள்ளப்படவில்லை; அல்லது, காலவோட்டத்தில் அப்படியான அரசியல்வாதிகளும் இந்தக் 'குட்டைக்குள்' ஊறவைக்கப்பட்டு விட்டார்கள் எனலாம்.

இலங்கையில் கட்டமைப்பு முறைமையை மாற்றக் கோரி, 2022இல் நட்தேறிய பெரும் மக்கள் எழுச்சி, இதற்கெல்லாம் ஆகப் பிந்திய உதாரணமாகும். காலம் கனிந்து, பழம் நழுவிப் பாலில் விழும் தருணம் பார்த்து, வேறு என்னவோ நடந்தேறிவிட்டது.

இந்தப் பின்னணியில், மக்களாகிய நாம் சில விடயங்களை மறந்து விடுகின்றோம்.

அதாவது, இலங்கையின் அரசியல் கட்டமைப்பானது, மக்கள் நலனை மையமாகக் கொண்டதாக, ஊழல் அற்றதாக, எல்லா இனங்களுக்கும் சமத்துவம் வழங்குவதாக, மக்களையும் அவர்களது உரிமைகளையும் மதிப்பதாக மாற வேண்டும் என்று நினைக்கின்றோம். அதன்மூலம் நாட்டில் பொருளாதார வளர்ச்சி மட்டுமன்றி, எல்லாப் பரப்புகளிலும் அபிவிருத்தி ஏற்பட வேண்டும் என்ற எண்ணம், மக்கள் மத்தியில் அதிகமாக உள்ளது.

இந்த இலக்கைத் தாமாக, இயல்பாக அடைய முடியாத ஒரு சமூகமாக, இலங்கை மக்கள் இருப்பதாகச் சொல்லலாம். இதனை ஓரளவுக்கேனும் சாதிப்பதற்கு, இந்த மாற்றம் மக்களிடத்தில் இருந்து ஆரம்பமாக வேண்டும்.

மக்கள் தமது எண்ணங்களை, சிந்தனைகளை, நடத்தைக் கோலங்களை, கொள்கைகளை, அணுகுமுறைகளை மறுசீரமைப்பதுடன், அதனூடாகத் தமது அரசியல் பிரதிநிதிகளைத் திருத்துவதற்கு, மாற்றுவதற்கு, அவர்களுக்கு வரலாற்றுப் பாடங்களை புகட்டுவதற்கு முன்வர வேண்டும்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து, இன்று வரை ஆட்சி செய்கின்ற ஆட்சியாளர்களை நாமறிவோம். ஒவ்வொரு ஜனாதிபதியும் பிரதமரும் எவ்வாறு காலத்தை கடத்தினார்கள் என்பதையும், இலங்கை அரசியலில் செல்வாக்குச் செலுத்திய, செலுத்திக் கொண்டிருக்கின்ற அரசியல் தலைமைகள் எப்படிப்பட்டவர்கள் என்பதும் இரகசியமானதல்ல!

மக்களை ஏமாற்றுகின்ற, மக்களைப் பகடைக்காய்களாக்கி தமது காரியங்களைச் சாதித்துக் கொள்ள நினைக்கின்ற அரசியல் தரப்புகளை மட்டுமன்றி, வெளிநாட்டுச் சக்திகள், இனவாத, பயங்கரவாத, கடும்போக்குவாத இயக்கங்களையும் புத்தியுள்ள மக்கள் புரிந்து வைத்துள்ளார்கள்.

இன்றுவரை ஆட்சி செய்கின்ற ஆட்சியாளர்கள் எப்படிப்பட்டவர்கள்; அவர்கள் எதைச் செய்வார்கள், எதைச் செய்யமாட்டார்கள் என்ற பட்டறிவு எமக்கு உள்ளது. குறிப்பாக, ஒரு குறிப்பிட்ட பெருந்தேசியக் கட்சியை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கம் அல்லது, ஆட்சியாளரின் கொள்ளளவு, இயலுமை என்ன என்பதைப் புரியாதவர்களாக நாம் இருக்க முடியாது.

ஒவ்வொரு பெரிய கட்சிக்கும், ஒரு வரலாற்றுப் பதிவு உள்ளது. சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசிய கட்சி, பொதுஜனப் பெரமுன, மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகளின் அரசியல் நகர்வுகள், ஆற்றல்கள் பற்றி எல்லாம், காலம் நமக்கு சொல்லித் தந்துள்ளது. இலங்கை மக்கள் அனுபவித்த, அனுபவிக்கின்ற வலிகளின் தோற்றுவாய், காரணகர்த்தாக்கள் யார் என்பதை சரியாக விளங்கிக் வேண்டியுள்ளது.

பெருந்தேசிய கட்சிகளின் ஆளுகை, அரசியலை மட்டுமன்றி, சிறுபான்மையின கட்சிகள் எவ்விதம் செயற்படுகின்றன என்பதையும் நன்கறிந்தவர்களாக, நாம் இருக்கின்றோம்.

தமிழ்த் தேசிய கட்சிகள் உரிமை, போராட்டம் என்று காலத்தைக் கடத்தியமை, வீண்போய்விட்டது என்று சொல்லிவிட முடியாது. கருத்தியல் ரீதியான பாரிய அடைவை, அது பெற்றிருப்பது மாத்திரமன்றி, அதனூடாகச் சில விடயங்களை, தமிழர்கள் சாதித்துக் கொள்ளவும் முடிந்திருக்கின்றது என்பதை மறுக்க முடியாது.

ஆனால், 50 வருடங்கள் என்ற காலப் பகுதியை எடுத்துக் கொண்டால், தமிழ் மக்கள் பெற்றுக் கொண்டது குறைவானது என்றுதான் கூற வேண்டும். உரிமையில் மட்டும் அக்கறை காட்டியதால், சில உரிமைகள் கிடைத்துள்ளன. பல தமிழர்கள் வெளிநாடுகளில் அடைக்கலம் பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஆனால், ஒப்பீட்டளவில் அடிமட்ட மற்றும் கீழ்நடுத்தர தமிழ் மக்களுக்கு, பெரிய அனுகூலங்கள் கிடைக்கவில்லை. குறைவான அபிவிருத்திகளே இம்மக்களை சென்றடைந்துள்ளமை, அவர்களது அன்றாட வாழ்வில் பிரதிபலிக்கின்றது. கணிசமான தமிழ் மக்கள், இன்னும் வறுமையின் பிடிக்குள் அகப்பட்டவர்களாக உள்ளனர். கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் அவர்களுக்கான அரசியல் தீர்வும் தென்படவில்லை.

இலங்கையில் மிக மோசமாக வஞ்சிக்கப்பட்ட மக்கள் கூட்டம் என்றால் அது மலையக மக்கள்தான். மலையக மக்கள் எனும் பொது அடையாளத்தின் கீழ், இந்திய வம்சாவளி தமிழர்கள் மட்டுமன்றி, மூவின மக்களும் உள்ளடங்குகின்றனர் என்பது கவனிப்புக்குரியது.

இந்த நாட்டின் அபிவிருத்தியிலும் சரி, உரிமையிலும் சரி அதிகமாக புறக்கணிக்கப்பட்டவர்களும் இன்றுவரை வஞ்சிக்கப்பட்டவர்களும் மலையக மக்கள்தான் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். பொருளதார ரீதியாக ஒடுக்கப்படுவது, சுரண்டப்படுவது இதில் முக்கியமானது.

தொண்டமானுக்கு பிறகு வந்த மலையக தலைவர்கள், மக்களுக்கு உண்மையான விடிவைக் கொண்டு வரவில்லை. ஏதோ பிரகடனப்படுத்தப்படாத ஒரு விளிம்புநிலைச் சமூகத்தைப் போலவே, மலையக தோட்டப் புறங்களில் வாழ்கின்ற மக்கள் இன்றும் உள்ளனர். அவர்களுக்கு வாக்குரிமை மட்டும் இல்லையென்றால், அவர்கள் திறந்தவெளியில் உலாவ விடப்பட்ட அடிமைகள் போலத்தான் வாழ நேரிட்டிருக்கும்.

மறுபுறத்தில், முஸ்லிம் அரசியல் கட்சிகள், அரசியல் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றோரின் இயலுமை, இயலாமை, கொள்ளளவு, போக்கு, பண்பியல்புகள் எல்லாவற்றையும் முஸ்லிம் சமூகம் தெட்டத் தெளிவாக அறியும். தனித்துவ அடையாள அரசியல் கோட்பாடு தோற்றம் பெறுவதற்கு முன்னர், முஸ்லிம்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள், முஸ்லிம் கட்சிகள் உருப்பெற்ற பிறகு எவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டன என்பதை மீளாய்வு செய்ய வேண்டும். எம்.எச்.எம் அஷ்ரபுக்கு முன்னர் - பின்னர் என காலவகைப்படுத்தி இதை நோக்கலாம்.

இந்த அடிப்படையில், தனித்துவ அடையாள அரசியலில் முஸ்லிம்கள் கணிசமான அபிவிருத்தியைப் பெற்றிருக்கின்றார்கள்; மிகக் குறைந்தளவு உரிமைகளையே வென்றிருக்கின்றார்கள்.

மர்ஹூம் அஷ்ரபுக்குப் பிறகு, அபிவிருத்தி அரசியல் என்பது காத்திரமானதாக, சமூக மேம்பாட்டை மையமாகக் கொண்டதாக அமையவில்லை. கட்டடங்கள், வீதிகள் என, அபிவிருத்தித் திட்டங்களும் தொழில் வாய்ப்புக்களும் அதிக இடத்தைப் பிடித்துள்ளன.

இவற்றைக் கூட வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மூன்று முஸ்லிம் அரசியல்வாதிகள்தான் செய்திருக்கின்றார்கள். கடந்த 25 வருடங்களில் எம்.பி பதவி வகித்த ஏனைய எம்.பிக்கள் எல்லோரும் ,அபிவிருத்தி அரசியலில் கூட வெறுமனே 'வார்த்தையால் வடைசுட்டுவிட்டு' சென்றிருக்கின்றார்கள் என்பதே உண்மையாகும்.

இதேவேளை, முஸ்லிம் சமூகம், கடந்த மூன்று தசாப்தங்களில் உரிமை அரசியலில், ஒரு சிறு அடியைத்தானும் எடுத்து வைக்கவில்லை. முஸ்லிம் கட்சிகளும் தலைவர்களும் தளபதிகளும் தோற்றம் பெற்றார்கள். தேர்தல் மேடைகளில் மக்கள் முன் உணர்ச்சி பொங்கப் பேசினார்கள். ஆனால், 'ஏட்டுச் சுரக்காயாகவே' அவை இன்னுமுள்ளன.

"மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தருவோம்; அபிவிருத்தியை கொண்டு தருவோம்" என்றார்கள். ஆனால், அவர்கள் 'வெகுமதி'களுக்காக ஆட்சியாளர்களிடம் சோரம் போனதாலும் பெருந்தேசிய கட்சிகளின் கிளைக் கட்சிகள் போ,ல முஸ்லிம் கட்சிகள் இயங்கிக் கொண்டிருப்பதாலும், முஸ்லிம் சமூகம் 2000ஆம் ஆண்டு கைவிடப்பட்ட இடத்திலேயே இன்னும் நிற்கின்றது.

அந்த வகையில், இலங்கை சூழலில் மிக மோசமாக கெட்டுக்குட்டிச் சுவராகியுள்ள அரசியல், முஸ்லிம் மக்களுக்கானது என்பதைச் சொல்வதில் எந்தத் தயக்கமும் இல்லை.

ஆகவே, இலங்கையில் வாழ்கின்ற அனைத்து இனமக்களுக்கும் பெருந்தேசிய கட்சிகள், ஆட்சியாளர்கள், தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளைப் பற்றி பட்டவர்த்தனமாக தெரியும். அவர்களில் யாரை மாற்ற வேண்டும் என்பதை, பல தடவைகளில் உணர்ந்திருக்கின்றோம்.

இருப்பினும், தேர்தல் ஊடாகவும் வேறு வழிமுறைகளிலும் கிடைக்கப் பெற்ற வாய்ப்பை, இலங்கை மக்கள் சரிவரப் பயன்படுத்தினார்களா? தாம் எதிர்பார்க்கும் நாடாக இலங்கையை மாற்றுவதற்குத் தடையாக இருப்பவர்களுக்கு பாடம் புகட்டினார்களா? மாற்றுத் தெரிவை சரியாக அடையாளம் கண்டுள்ளார்களா என்பவைதான் இங்குள்ள கேள்விகளாகும்.

அதேபோன்று, அரசியல்வாதிகளைத் திருத்துவதற்கு முன்னர், இலங்கை மக்கள் தம்முடைய நடத்தைக் கோலங்களில் என்ன மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளார்கள்? அதனூடாக மாற்றத்துக்காக முன்னிற்பதற்கான தகுதியை, இலங்கை மக்கள் பெற்றுக் கொண்டுள்ளார்களா என்பதையும் சிந்திக்க வேண்டிய தருணமிது.

இலங்கையில் அரசியல்வாதிகளும், அவர்களது அரசியல் கலாசாரமும் தானாக திருந்தாது என்பதும், அதனூடாக இயல்பாகவும் இலகுவாகவும் (மக்கள் எதிர்பார்க்கின்ற) ஒரு மாற்றம் நிகழ்ந்து விடாது என்பதும் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். .

அப்படியென்றால், முதலில் மக்கள் தம்மை திருத்திக் கொள்ள வேண்டும். பின்னர் நாட்டை, அரசியலைத் திருத்தி, மாற்றத்தை கொண்டு வரவும் தயாராக வேண்டும். இது ஒரு குழுவாக, கட்சியாக, ஒரு சில செயற்பாட்டாளர்களால் மட்டும் முன்னெடுத்துச் செல்ல முடியாது. 22.2 மில்லியன் மக்களும் ஒன்றிணைய வேண்டும்.

இது நடக்கும் வரை, எந்தத் தேர்தல் எப்போது நடந்தாலும், யார் ஆர்ப்பாட்டம் நடத்தினாலும், யார் ஆட்சிக்கு வந்தாலும், மக்கள் கனவு காணுகின்ற 'மாற்றம்' நிகழப் போவதும் இல்லை. இந்த அரசியல் கலாசாரம் திருந்தப் போவதும் இல்லை.

## கடிதங்கள்

### யானைகள் அட்டகாசம்: ஓட்டமாவடி மக்கள் அச்சம்

மட்டக்களப்பு, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் காகிதநகர் கிராம சேவகர் பிரிவில், யானைகளின் அட்டகாசத்தால் மிகவும் சிரமப்படுவதாகவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்வதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

மஜ்மா கிழக்கு, மஜ்மா மேற்கு, காகிதநகர், காவத்தமுனை போன்ற கிராமங்களுக்குள், இரவு நேரங்களில் உட்புகும் யானைகளின் அட்டகாசத்தால் தங்களது வீட்டுத்தோட்ட பயிர்கள் சேதமடைவதுடன், தங்களது உயிர்களுக்கும் உத்தரவாதம் இல்லாமல், அச்சத்திலேயே இரவுப் பொழுதை கழிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில், மஜ்மா கிழக்கு பகுதிக்குள் அதிகாலை வேளையில் புகுந்த யானைகள் தென்னை, பலா, முந்திரிகை, கொய்யா போன்ற பயன்தரு மரங்களை சேதப்படுத்திச் சென்றுள்ளன.

பலவருட காலமாக, சிரமங்களுக்கு மத்தியில் உருவாக்கிய மரங்களில் இருந்து பயன் பெறக்கூடிய பருவத்தை எட்டும்நிலையில், ஓர் இரவில், ஊருக்குள் புகுந்த யானைகள், பயன்தரு மரங்களை அழித்து விட்டுச் சென்றுள்ளன. ஒவ்வொரு வருடமும் இதே நிலை காணப்படுவதாகவும், யானை வேலி போட்டுத்தருவதாக அதிகாரிகள் தெரிவித்துச் சென்றதன் பின்னர், அந்த அதிகாரிகளைக் காணமுடிவதில்லை.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பொதுமக்கள் மீதான தமது பொறுப்பை உணர்ந்து, யானை வேலிகளை அமைத்து, யானைகளிடம் இருந்து தமது உயிருக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பு பெற்றுத்தருமாறும் மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

எம்.எம் அஹமட் அனாம்

# ஒஸ்கார் விருதை வென்ற இந்திய பாடல்



சிறந்த பாடலுக்கான ஒஸ்கார் விருதை 'ஆர்ஆர்ஆர்' திரைப்படத்தின் "நாட்டு நாட்டு" பாடல் வென்றுள்ளது.

இயக்குநர் ராஜமவுலி இயக்கத்தில் கடந்தாண்டு வெளியான 'ஆர்ஆர்ஆர்' திரைப்படம் உலகம் முழுவதும் 1,200 கோடியை வசூலித்திருந்தது.

இப்படத்தில் நடிகர்கள் ஜூனியர் என்டிஆர், ராம் சரண், அஜய் தேவ்கன், ஆலியாபட், ஸ்ரேயா சரண் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். படத்திற்கு எம்.எம்.கீரவாணி இசையமைத்திருந்தார்.

இதேவேளை, தமிழ்நாடு நீலகிரி மாவட்டம் முதுமலையில் யானைகளை பராமரிக்கும் தம்பதியின் கதையைக் கொண்ட 'தி எலிபெண்ட் விஸ்பரர்ஸ்' என்ற குறும் ஆவணப்படம் ஒஸ்கார் விருதை வென்றுள்ளது.



## ஒஸ்காரைத் தட்டிச் சென்ற 'தி எலிபெண்ட் விஸ்பர்ஸ்'

அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்று வரும் 95 ஆவது ஒஸ்கார் விருது வழங்கும் விழாவில் இந்தியாவில் எடுக்கப்பட்ட 'தி எலிபெண்ட் விஸ்பர்ஸ்' (The Elephant Whisperers) என்ற படம், சிறந்த ஆவணக் குறுப்படத்திற்கான ஒஷ்கார் விருதை வென்றுள்ளது.

'தாயிடம் இருந்து பிரிந்து தவிக்கும் குட்டியானைகளைப் பராமரிக்கும் பழங்குடியின தம்பதியின் யதார்த்த வாழ்க்கையை மையமாகக் கொண்டு' இவ் ஆவணப்படம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இக்குறும்படத்தை இயக்கிய கார்திகி குன்செல்வெஸ் மற்றும் தயாரிப்பாளர் குனெட் மொன்கோ ஆகியோர் குறித்த விருதைப் பெற்றுக் கொண்டனர்.

## சொக்க வைக்கிறது...



பிகினியில் நடிகை ராய் லட்சுமி வெளியுட்டுள்ள புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றது.

## கவர்ச்சியாக நடிக்கலாமா?

தமிழ், தெலுங்கு திரையுலகில் முன்னணி கதாநாயகியாக வலம் வந்த காஜல் அகர்வால் தொழில் அதிபர் கவுதம் கிச்சலுவை காதலித்து 2020-இல் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை உள்ளது. திருமணத்துக்கு பிறகும் காஜல் அகர்வால் சினிமாவில் தொடர்ந்து நடித்து வருகிறார். தற்போது கமல்ஹாசனின் இந்தியன் 2 படத்தில் நடிக்கிறார்.

இந்த நிலையில் திருமணமான நீங்கள் கவர்ச்சியாக நடிப்பீர்களா? என்று காஜல் அகர்வாலிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதில் அளித்து காஜல் அகர்வால் கூறும்போது, "நடிக்க கூடாது என்று எதுவும் இல்லை. இந்த விஷயத்தில் நானும், எனது கணவரும் வெளிப்படையாகவே இருக்கிறோம். காதல் காட்சிகள் என்றால் சக நடிகருடன் நான் நெருங்கித்தான் நடிக்க வேண்டும். அப்படி நடிக்க மாட்டேன் என்று சொல்ல முடியாது.

### 7 ஒஸ்கார் விருதுகளை வென்ற

## 'எவ்ரிதிங் எவ்ரிவேர் ஆல் அட் ஒன்ஸ்'




'எவ்ரிதிங் எவ்ரிவேர் ஆல் அட் ஒன்ஸ்' திரைப்படம் 7 ஒஸ்கார் விருதுகளை வென்று சாதனை படைத்துள்ளது.

டேனியல் கிவான் மற்றும் டேனியல் ஸ்கினெர்ட் இயக்கத்தில் கடந்தாண்டு மார்ச் மாதம் வெளியான படம் "எவ்ரிதிங் எவ்ரிவேர் ஆல் அட் ஒன்ஸ்". இந்தப்படம் 7 ஆஸ்கர் விருதுகளை வென்று உலக அரங்கில் சாதனை படைத்துள்ளது. அதன்படி சிறந்த நடிகைக்கான ஒஸ்கார் விருதை படத்தில் நடித்த மைக்கேல் யோவ் (Michelle Yeoh) வென்றுள்ளார்.

டேனியல் கிவான் மற்றும் டேனியல் ஸ்கினெர்ட் இருவரும் சிறந்த இயக்குநர்களுக்கான விருதை பெற்றுள்ளனர். சிறந்த படத்தொகுப்புக்கான விருதை பால் ரோஜர்ஸ் பெற்றுள்ளார். சிறந்த படம், சிறந்த திரைக்கதை, சிறந்த துணை நடிகர், சிறந்த துணை நடிகை உள்ளிட்ட 7 விருதுகளைப் பெற்று இந்த படம் மிரட்டியுள்ளது.

### அந்த சீரியல்களை பார்க்காமல்

## நான் தூங்கமாட்டேன்



தமிழ் சினிமாவில் உச்ச நட்சத்திரமாக ஜொலித்து வரும் நடிகர் தான் விஜய். இவரின் தாய் ஷோபா சந்திரசேகர் பாடகி, கதாசிரியர், தயாரிப்பாளர் என பல முகம் கொண்டவராக விளங்கி வருகின்றார். விஷ்ணு படத்தில் விஜய்யுடன் இணைந்து தொட்டபெட்டா ரோட்டு மேல என்ற பாடலை பாடி அசத்தினார்.

வாரிசு இசை வெளியீட்டு விழாவில் வெடித்த சர்ச்சை பற்றி சமீபத்தில் விளக்கம் அளித்திருந்தார் ஷோபா சந்திரசேகர். அதாவது வாரிசு விழாவில் விஜய் தன் தாய் தந்தையை மதிக்கவில்லை என சிலர் விமர்சனம் செய்தனர். இதற்கு பதிலளித்த ஷோபா சந்திரசேகர், வாரிசு விழா விஜய்யின் ரசிகர்களுக்காக நடத்தப்பட்ட விழா. அதில் நாங்கள் அனைவரும் ஒரு குடும்பமாக கலந்துகொண்டு விஜய்யின் ரசிகர்கள் அவருக்கு தந்த வரவேற்பை மகிழ்ச்சியாக பார்த்துக்கொண்டிருந்தோம்.

அதை தவிர விஜய் எங்களை கண்டுகொள்ளவில்லை என்ற எண்ணமே எங்களுக்கு வரவில்லை. இதெல்லாம் வெறும் வதந்திதான் என்றார் ஷோபா. இந்நிலையில் சமீபத்தில் ஒரு பேட்டியில் தனக்கு பிடித்த சீரியல்களை பற்றி பேசியுள்ளார். அதாவது சன் டிவியில் ஒளிபரப்பாகும் எதிர் நீச்சல் சீரியலை விரும்பி பார்ப்பேன் என கூறிய ஷோபா சந்திரசேகர், விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் பாண்டியன் ஸ்டோர்ஸ், பாக்கியலட்சுமி போன்ற சீரியல்களை தவறாமல் பார்ப்பேன் என்றார்.

இந்த சீரியல்களை பார்த்த பிறகு தான் நான் தூங்க செல்வேன் என்றும் கூறினார் ஷோபா சந்திரசேகர்.



### யாழ்ப்பாண இளைஞர்கள் மத்தியிலான

# விலகல் நடத்தை

பிரான்சிஸ் செல்வராசா. சியான்சன்
(யாழ். பல்கலைக்கழகம் ஊடகக்கற்கை நான்காம் வருடம்)



'வளம் மிக்க சமுதாய மேடை அதன் தூண்களாக இளைஞர் படை' நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் வளர்ச்சி தூதுவர்களாக இளைஞர்கள் கருதப்படுகின்றனர். இன்றைய உலகம் அதீத வளர்ச்சியை கண்டு கொண்டிருப்பதில் இளைஞர்களின் பங்களிப்பு முக்கியமான ஒன்றாக திகழ்கின்றது.

சமகால சமூகத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகளில் தீவிரமான ஒன்றாக இளையோர் மத்தியிலான விலகல் நலத்தை காணப்படுகின்றது. இன்று உலகம் முழுவதும் மனித வாழ்வின் போக்கினை மாற்றி அமைத்து வரும் சமூக சவால்கள் தொடர்பில் பெருமளவு அக்கரை செலுத்தப்படுகின்றது. இன்றைய நவீன சமூகங்களில் நியமறுநிலை வளர்ந்து வரும் சமூக பாதிப்பாக உள்ளது. சமூகத்தில் காணப்படும் ஒழுக்க விதிகளை மீறி நடக்கும் பெரும்பாலானோர் இன்று அதிகரித்துள்ளனர். அந்த வகையில் இளைஞர்களின் விலகல் நடத்தையானது தனிமனித பிரச்சினையாக அல்லாமல் மாற்றீடற்ற சமூகத்திற்கு எதிரான செயலாக உள்ளது. ஒரு சமூகத்தில் கவனிக்கத்தக்க மாற்ற பிரிவினராக அமையும் வயது பிரிவினர் என்ற வகையில் இளைஞர்களை குறித்து இலக்கை அடைவதனில் காணப்படும் சவால்களாக இளையோர் விலகல் நடத்தைகள் காணப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின்படி இளைஞர்கள் என்போர் 15 தொடக்கம் 24 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும், UNESCO படி 15 தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்டோர் என வரையறுக்கப்படுகின்றன. பிரதானமான விலகல் நடத்தைகளாக களவு, நிதி மோசடி, கொலை, பாலியல் வல்லுறவு, போதை வஸ்து பாவனை, போதைப்பொருள் விற்பனை, கடத்தல், கப்பம் கோருதல், சண்டை, முரண்பாடு ஆகிய விலகல் நடத்தைகளாக இனம் காணப்பட்டுள்ளன. பெரும்பாலும் விலகல் நடத்தைகளுக்கான காரணங்களாக சமூக, குடும்ப சூழ்நிலை, வறுமை, நண்பர்கள், காதல், போதை பொருள் பாவனை, தொழில் ரீதியான அழுத்தம் என்பன காரணமாக அமைகின்றன. சமூகத்தில் இளைஞர்களுக்கான தேவைகள் பூர்த்தி செய்யப்படாமையும் முக்கிய காரணமாக அமைகின்றது. இலங்கையில் Department of probation and child care service sri Lanka statistical Report 2010ன் அடிப்படையில் 1182 இளைஞர்கள் குற்றப்பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண சிறைச்சாலையில் 2015 ஆம் ஆண்டு கையேட்டின் படி, 3,345 பேர் குற்றப்பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் 264 பேர் தண்டனை பெற்ற குற்றவாழியாக காணப்பட்டுள்ளனர். தற்போது விலகல் நடத்தை காரணமாக 350 பேர் வரை சிறைச்சாலையில் காணப்படுகின்றனர்.

இளைஞர்கள் மத்தியிலான விலகல் நடத்தைகளால் சமூகத்தில் ஒதுக்கப்பட குடும்பத்திலிருந்து வெளியேற்றப்படல், மனசோர்வு, வறுமை ஆகிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இளைஞர்களின் குற்ற செயல்கள் பற்றிய பல ஆய்வுகளில் சுமார் 85 சதவீதம் இளைஞர்கள் மாறுபட்ட நடத்தை கொண்டவர்களாக காணப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தை பொருத்தவரை விலகல் நடத்தையில் ஈடுபடுபவர்கள் அதிக அளவில் 92 சதவீதத்தினர் ஆண்களாகவும் 8 சதவீதத்தினர் பெண்களாகவும் காணப்படுகின்றனர்.

பெரும்பாலான ஆண்கள் வருமானத்தினை ஈட்டி கொள்வதற்காகவே விலகல் நடத்தையில் ஈடுபடுகின்றனர.; இதில் அதிகளவானோர் கூலி, கடத்தொழில், மேசன் வேலை, வியாபாரம், தச்சுத்தொழில், கல் உடைத்தல் என்பவற்றை மேற்கொள்பவராக உள்ளனர். இவர்களில் வருமான பற்றாக்குறையை இதற்கு காரணமாக உள்ளது.

அதிகளவு போதைப்பொருள் பாவானை சமூகத்தில் பல முரண்பாடுகளை தோற்றுவிக்கின்றது. குறிப்பாக இரண்டு சாதிக்கும் இடையிலான முரண்பாடுகளில் ஒரு குழுவின் கருத்தினை மற்றக்குழு ஏற்காமை காரணமாக அதிக அளவு குழு முரண்பாடுகள் ஏற்படுகின்றன. மேலும் குழுக்களாக இணைந்து களவெடுத்தல,; சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடல் என்பன அதிகமாக உள்ளது. மேலும் இவர்களில் அதிக அளவு போதை பொருட்களை பயன்படுத்துபவர்களாக உள்ளனர். பெருமளவு போதை பொருள் பாவணையாளர்கள் அதிகரிக்கின்ற அதேவேளை, போதை பொருள் விற்பனை செய்பவர்களும் அதிகரித்துள்ளனர். கஞ்சா விற்பனை, கசிப்பு விற்பனை என்பன அதிகளவு யாழ்ப்பாண பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்றது.

இதனால் இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பதற்கு ஏதுவாக அமைகின்றது. கப்பம் கோரல் நடவடிக்கையும் இங்கு அதிக அளவில் இடம்பெறுகின்றது. பெருமளவு இளைஞர்கள் நண்பர்களுடன் இணைந்து பொதுமக்களை அச்சுறுத்தி பண சேகரித்துள்ளனர். மேலும் நண்பர்களுக்கு இடையிலான முரண்பாடு அயலவர்களுக்கு இடையிலான முரண்பாடு என்பது அதிகரித்துள்ளதோடு, குழுவாக இணைந்து களவெடுத்தல் என்பவற்றிலும் ஈடுபடுகின்றனர். மேலும் சட்டவிரோத திருமணங்களிலும் ஈடுபடுகின்றனர். சட்டை விரோத திருமணம் மூலம் தவாரிப்பு பணம் செலுத்த முடியாதவர்கள் சிறையில் அதிகளவு வாழ்கின்றனர்.

இளைஞர்களின் விலகல் நடத்தைகளால் தாக்கம் செலுத்துவதில் குடும்பம் சூழல் வகிப்பாகத்தை நோக்கும் போது, தனித் தலைமை குடும்பங்களில் வாழ்த்தல், குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகள் நிறைவேற்றப்படாமை, பெற்றோர் பிள்ளைகள் மீது கட்டுப்பாட்டினை மேற்கொள்ளாமை, ஆகிய காரணங்களாக அமைகின்றன. மேலும் வறுமை மிக முக்கிய காரணியாக அமைந்துள்ளது. பொருளாதார பற்றாக்குறை நிலவுவதால் தனிப்பட்ட தேவைகள், விருப்பங்கள் என்பவற்றை நிறைவேற்றிக் கொள்ள சட்டவிரோத தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

அத்தோடு குழுக்களாக நண்பர்களோடு செயல்படல், சமவயது அற்றவர்களுடான தொடர்புகள் என்பன காரணமாகவும் விலக நடத்தைகள் அதிகரிக்கின்றன. மேலும் இளைஞர்களின் வளர்ச்சியில் சமூக வலைத்தளங்களின் பாவனை அதிகரிப்பினாலும் பல எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது. போலியான கணக்குகள் கொண்ட வீடியோக்கள், தகவல் பரிமாற்றம் மற்றவர்களை அச்சுறுத்தும் செயல்பாடுகள் என்பன சமூக வலைத்தளங்கள் மூலம் விலகல் நடத்தையை அதிகரிக்க செய்துள்ளது.

இளைஞர்களின் இலக்குகள் மற்றும் அபிலாசைகளுக்கும் சமூக நிறுவன ரீதியான சாதனங்களுக்கும் இடையே ஏற்படுகின்ற முரண்பாடு சமூகத்தில் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் சமூக அங்கத்தவர்கள் மீது ஆரோக்கியமான செல்வாக்கினை பிரயோகிக்காமை, அதிகரித்த சமூக கட்டுப்பாடுகள் எதிர்மறையான சமூக அழுத்தங்கள் ஆகிய காரணிகள் இளைஞர்கள் மத்தியில் விலகல் நடத்தைகளில் ஈடுப்படுவதற்கு அதிகளவு தாக்கம் செலுத்துகின்றன.

எனவே, சிறுவயதிலேயே சிறப்பான கல்வியை வழங்குதல், பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல், வறுமை ஒழிப்பு நிகழ்ச்சி திட்டங்களை உருவாகுதல், தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல், வேலையில்லா பிரச்சனைகளை தீர்த்தல், இளைஞர் கழகங்களை ஆரம்பித்தல், உள ஆன்மீக ஆற்றுப்படுத்துதல், குடும்ப மட்டத்தில் இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் அளித்தல் என்பனவற்றின் மூலம் இளைஞர்களுக்கு ஏற்படும் தனியாள், குடும்ப, சமூக மட்டத்திலான தடைகளை குறைக்க முடியும.; இதன் மூலம் விலகல் நடத்தைகள் குறைக்கப்படுவதுடன் இளைஞர்கள் சமூகத்தில் செயற்திறன் மிக்கவர்களாக மாற்ற அமைக்க முடிவதுடன,; யாழ்ப்பாண பிரதேசத்தை மேலும் அபிவிருத்தி பாதைக்கு இட்டுச்செல்லக் கூடியதாக அமையும்.

# ஒஸ்காரில் இரு விருதுகள் முதலமைச்சர் ஸ்டாலின் வாழ்த்து

ஒஸ்கார் விருது வென்றுள்ள 'நாட்டு நாட்டுபாடல்' மற்றும் 'தி எலிபெண்ட் விஸ்பர்ஸ்' ஆவண குறும்படத்தை இயக்கிய படக்குழுவுக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் "ஒஸ்கார் விருதை வென்ற முதல் இந்திய ஆசிய பாடல் என்ற பெருமையை 'நாட்டு நாட்டு' பாடல் பெற்று புது வரலாற்றை உருவாக்கியுள்ளது. இசையமைப்பாளர் எம்.எம். கீரவாணி, சந்திரபோஸ், ராகுல் சிப்ளிகஞ்ச் & கால பைரவா உள்ளிட்ட படக்குழுவுக்கு வாழ்த்துகள்" என த் தெரிவித்துள்ளார்.

மேலும் 'தி எலிபெண்ட் விஸ்பர்ஸ்' படக்குழுவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள ஸ்டாலின், "ஒஸ்கார் விருது வென்றுள்ள கார்த்திகி கொன்சால்வ்ஸ், குனித் மோங்கோ இருவருக்கும் எனது வாழ்த்துகள். இந்தியத் தயாரிப்பில் உருவான



இப்படத்திற்கு முதன்முறையாக இரண்டு பெண்கள் ஒஸ்கார் விருதை வென்றுள்ளனர் என்ற செய்தியை விட இந்த நாளை எதுவும் அழகாக்கிவிட முடியாது. #TheElephantWhisperers இன் பொறுமையான உருவாக்கம் மற்றும் அதன் கதை விருதுக்கும் பாராட்டுக்கும் தகுதியானது" இவ்வாறு பதிவிட்டுள்ளார்.



மும்பை



## மும்பையில் வைத்தியர்கள் சாதனை

மும்பையிலுள்ள தனியார் வைத்திய சாலையொன்று 24 மணிநேரத்தில் இதயம் உள்ளிட்ட 6 உடல் உறுப்புகள் மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டு சாதனை படைத்துள்ளது.

இதுகுறித்து அவ்வைத்தியசாலை வெளியிட்டுள்ள அறிக்கையில், "3 நன்கொடையாளர்கள் உட்பட 8 பேரிடம் இருந்து இதயம், நுரையீரல், கல்லீரல், சிறுநீரகம் உள்ளிட்ட உறுப்புகள் தானமாகப் பெற்றப்பட்டதாகவும், அதைவைத்து உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும் 25 அறுவை சிகிச்சை நிபுணர்கள், 30 செவிலியர்கள் உள்ளிட்டோருடன் அறுவை சிகிச்சை உட்பட ஆறு சிகிச்சைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புனே



## பின்னோக்கிச் செலுத்தும் மனிதர்

மகாராஷ்டிரா மாநிலம், புனேவைச் சேர்ந்த 'சந்தோஷ் ராஜெஷிர்கே ' என்பவர் காரைப் பின்னோக்கிச் செலுத்தி வருவதன் மூலம் பிரபலமடைந்து வருகின்றார்.

கடந்த 2018ஆம் ஆண்டு இவ்விநோத பயணத்தை ஆரம்பித்த இவர், இதுவரை 11 மாநிலங்கள் வழியாக 6,000 கிலோமீற்றர்களைக் கடந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. மேலும் சராசரியாக 45 கிலோமீற்றர் வேகத்தில் பின்னோக்கிப் பயணிக்கும் இவர், இப்பயணத்திற்காகக் குறித்த காரில் எந்த மாற்றத்தையும் மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2017ஆம் ஆண்டு தனது காரில் ஏற்பட்ட கோளாறு காரணமாக புனே முதல் ராய்கர் வரை 180 கிலோமீற்றர் பின்னோக்கிப் பயணம் செய்ய வேண்டிருந்ததாகவும், இதன்போது வாகனத்தை பின்னோக்கிச் செலுத்துவதில் ஆர்வம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் "இப்படி பயணம் செய்யும் போது மற்ற ஓட்டுநர்கள் மீது மோதாமல் இருக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுவிஸ்

## ஏலத்தில் பிரமாண்ட எலும்புக்கூடு 67 மில்லியன்

ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த டைனோசரின் எலும்புக்கூடு, சுவிட்சர்லாந்தில் அடுத்த மாதம் ஏலத்திற்கு வருகிறது.

டிரினிட்டி என்றழைக்கப்படும் இந்த டைனோசர் எலும்புக்கூடு அடுத்த மாதம் 18ஆம் திகதி சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் ஏலம் விடப்படவுள்ளதாக ஏல நிறுவனமான கொல்லர் தெரிவித்துள்ளது.

ஐரோப்பாவில் டைனோசர் எலும்புக்கூடு ஏலம் விடுவது இதுவே முதல்முறை என்றும்,



60 முதல் 80 லட்சம் சுவிஸ் பிராங்குகள் வரை ஏலம் போக வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஸ்கொட்லாந்து

## கத்தி முனையில், மகனிடம் கொள்ளை: தந்தை கைது

ஸ்கொட்லாந்தில், கத்தி முனையில் தனது மகன் எனத் தெரியாமல் சிறுவனிடம், நபர் ஒருவர் பணம் பறிக்க முயற்சி செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவ தினத்தன்று 17 வயதான சிறுவனொருவன் ATM மையத்தில் பணம் எடுத்துக்கொண்டு இருந்துள்ளான். இதன்போது திடீரென அங்கு வந்த முகமூடி அணிந்த நபர், குறித்த சிறுவனிடம் கத்தியைக் காட்டி மிரட்டி பணம் பறிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்..

இதன்போது குரலை வைத்து தந்தையை அடையாளம் கண்ட சிறுவன், முகத்தை மறைக்கும் வண்ணம் அணிந்திருந்த கழுத்து குட்டையை இறக்கியுள்ளான்.

இதன்போது தனது மகனைப் பார்த்து அதிர்ச்சியடைந்த குறித்த நபர், தனது செயலுக்காக மகனிடம் மன்னிப்புத் தெரிவித்துள்ளார். எனினும் அவ்விடத்தை விட்டுத் தப்பிச்சென்ற சிறுவன், குடும்பத்தாரிடமும், பொலிஸாரிடமும் இதுகுறித்து புகாரளித்துள்ளான்.

இந்நிலையில் கைதான தந்தைக்கு 26 மாதங்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டை

# இறுதிப் பந்தில் வென்ற நியூசிலாந்து

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்டை நியூசிலாந்து இறுதிப் பந்தில் வென்றுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், கிறைஸ்ட்சேர்ச்சில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இப்போட்டியின் நேற்றைய ஐந்தாம் நாளை, தமது இரண்டாவது இனிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 28 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த நியூசிலாந்து, கேன் வில்லியம்ஸனின் ஆட்டமிழக்காத 121, டரைல் மிற்செல்லின் 81 ஓட்டங்களோடு 285 ஓட்டங்களென்ற வெற்றியிலக்கை 8 விக்கெட்டுகள் இழப்புடன் அடைந்தது. பந்துவீச்சில், அசித பெர்ணாண்டோ 3, பிரபாத் ஜெயசூரிய 2 மற்றும் கசுன் ராஜித, லஹிரு குமார ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியின் நாயகனாக டரைல் மிற்செல் தெரிவானார்.



ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

இலங்கை: 355/10 (துடுப்பாட்டம்: குசல் மென்டிஸ் 87, திமுத் கருணாரத்ன 50, அஞ்சலோ மத்தியூஸ் 47, தனஞ்சய டி சில்வா 46, தினேஷ் சந்திமால் 39 ஓட்டங்கள். பந்துவீச்சு: டிம் சௌதி 5/64, மற் ஹென்றி 4/80, மிஷெல் பிறேஸ்வெல் 1/17)

நியூசிலாந்து: 373/10 (துடுப்பாட்டம்: டரைல் மிற்செல் 102, மற் ஹென்றி 72, டொம் லேதம் 67 ஓட்டங்கள். பந்துவீச்சு: அசித பெர்ணாண்டோ 4/85, லஹிரு குமார 3/76, கசுன் ராஜித 2/104, பிரபாத் ஜெயசூரிய 1/46)

இலங்கை: 302/10 (துடுப்பாட்டம்: அஞ்சலோ மத்தியூஸ் 115, தனஞ்சய டி சில்வா ஆ.இ 47, தினேஷ் சந்திமால் 42 ஓட்டங்கள். பந்துவீச்சு: பிளையர் டிக்னர் 4/100, மற் ஹென்றி 3/71, டிம் சௌதி 2/57)

நியூசிலாந்து: 285/8 (துடுப்பாட்டம்: கேன் வில்லியம்ஸன் ஆ.இ 121, டரைல் மிற்செல் 81 ஓட்டங்கள். பந்துவீச்சு: அசித பெர்ணாண்டோ 3/63, பிரபாத் ஜெயசூரிய 2/92, கசுன் ராஜித 1/60, லஹிரு குமார 1/61)

போட்டியின் நாயகன்: டரைல் மிற்செல்



அவுஸ்திரேலியாவுக்கெதிரான தொடரை

## 2-1 எனக் கைப்பற்றிய இந்தியா

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-1 என இந்தியா கைப்பற்றியுள்ளது.

நான்கு போட்டிகள் கொண்ட இத்தொடரில் 2-1 என இந்தியா முன்னிலை வகித்த நிலையில், அஹமதாபாத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி நேற்று வெற்றி தோல்வியின்றி முடிவுக்கு வந்த நான்காவது போட்டியைத் தொடர்ந்தே தொடரை 2-1 என இந்தியா கைப்பற்றியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 480 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், உஸ்மான் கவாஜா 180, கமரொன் கிறீன் 114, டொட் மேர்பி 41, பதிலணித்தலைவர் ஸ்டீவ் ஸ்மித் 38, நேதன் லையன் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், இரவிச்சந்திரன் அஷ்வின் 6, மொஹமட் ஷமி 2, அக்ஸர் பட்டேல் மற்றும் இரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்தியா, சகல விக்கெட்டுகளையும் இழந்து 571 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், விராட் கோலி 186, ஷுப்மன் கில் 128, அக்ஸர் பட்டேல் 79, ஸ்ரீகர் பாரத் 44, செட்டேஸ்வர் புஜாரா 44, அணித்தலைவர் றோஹித் ஷர்மா 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், மேர்பி மற்றும் லையன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், மத்தியூ கூனுமென், மிற்செல் ஸ்டார்க் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, 2 விக்கெட்டுகளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றபோது தமது இனிங்ஸை இடைநிறுத்தியிருந்ததோடு போட்டி முடிவுக்கு வந்தது. துடுப்பாட்டத்தில், ட்ரெவிஸ் ஹெட் 90, மர்னுஸ் லபுஷைன் ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களைப் பெற்றனர்.



இங்கிலாந்துக்கெதிரான

## தொடரைக் கைப்பற்றிய பங்களாதேஷ்

இங்கிலாந்துக்கெதிரான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியது.

இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த பங்களாதேஷ், மிர்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே இன்னுமொரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

இங்கிலாந்து: 117/10 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பென் டக்கெட் 28 (28), பில் ஸோல்ட் 25 (19) ஓட்டங்கள். பந்துவீச்சு: மெஹிடி ஹஸன் மிராஸ் 4/12 [4], ஹஸன் மஹ்மூட் 1/10 [2], ஷகிப் அல் ஹஸன் 1/13 [3], முஸ்தபிசூர் ரஹ்மான் 1/19 [4], தஸ்கின் அஹ்மட் 1/27 [4])

பங்களாதேஷ்: 120/6 (18.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ ஆ.இ 46 (47), மெஹிடி ஹஸன் மிராஸ் 20 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜொஃப்ரா ஆர்ச்சர் 3/13 [4], றெஹான் அஹ்மட் 1/11 [2], சாம் கர்ரன் 1/15 [3], மொயின் அலி 1/25 [4])

போட்டியின் நாயகன்: மெஹிடி ஹஸன் மிராஸ்

இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டியானது இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.



றிதிதென்ன இக்ராஹ் வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில்

## சம்பியனான சபா இல்லம்

எச்.எம்.எம். பர்ஸான்

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கல்விக் கோட்டத்துக்குட்பட்ட றிதிதென்ன இக்ராஹ் வித்தியாலயத்தின் 10ஆவது இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இவ்வில்ல விளையாட்டுப் போட்டியில் சபா இல்லம் 941 புள்ளிகளைகளை பெற்று சம்பியனானது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 14 மார்ச் 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.